padippakam

# ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்



முருகையன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# ஒவ்வொரு
# புல்லும்
# பூவும்
# பிள்ளையும்

முருகையன்

தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்

padippakam

ஊடு போய் எதையும் உள் புகுந்தேறி
ஓடி ஓடி அறுக்கும் நுனி கொண்ட
மோடியான வடிவேலது வாங்கி
மூசி வீசுபவர் பாவலர் ஆவார்.


தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு - 80

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (கவிதைத் தொகுதி) |
| ஆசிரியர் | : | இ. முருகையன். |
| பதிப்பு | : | ஒக்ரோபர் 2001 |
| வெளியீடு | : | தேசிய கலை இலக்கியப் பேரவை |
| அச்சிட்டோர் | : | சொ.ஃப்டடெக் கிரபிக்ஸ் |
| விநியோகம் | : | சவுத் ஏசியன் புக்ஸ். வசந்தம் (பிறைவேற்) லிமிட்டட். 44. மூன்றாம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி. கொழும்பு -11. தொலைபேசி : 335844. |
| விலை | : | ரூபா. 150/= |

| | | |
|---|---|---|
| Title | : | Ovvoru Pullum Poovum Pillaiyum |
| Author | : | R. Murugaiyan |
| Edition | : | October, 2001 |
| Publishers | : | Dhesiya Kalai Ilakkiyap Peravai |
| Printers | : | Softec Graphics |
| Diustributors | : | South Asian Books, Vasantham (Pvt) Ltd, No. 44, 3rd Floor, C.C.S.M. Complex, Colombo -11. Tel : 335844 |
| ISBN | : | 955-863 7-01-7 |
| Price | : | Rs. 150/= |


படிப்பகம்

padippakam

# பதிப்புரை

இத் தொகுதியில் உள்ள கவிதைகள் 1952–57 கால இடைவெளியிலும் 1984–98 கால இடைவெளியிலும் கவிஞர் முருகையனால் எழுதப்பட்டு இதுவரை எத்தொகுப்பிலும் இடம்பெறாதவை. 1952–57 காலத்தவை என முன்னர் வந்த தொகுதியில் சேர்க்கப்படவில்லை என்பதற்கான காரணங்களில் அவரது கவிதைகள் நூல் வடிவம் பெற்ற போது அவரது சமூகப்பார்வை தமிழ் இன நலன் பற்றிய ஒரு குறுகிய நோக்கினின்று விடுபட்டு தமிழர் நலனை முழு மானுட நலனுடனும் இணைத்து நோக்கும் ஒன்றாக விரிவடைந்தமை ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். பின்னைய காலத்திற்குரியவை அவரது தொகுதிகளில் சேர்க்கப்படாமல் விடுபட்ட சிலவும் அவரது கடைசித் தொகுதிக்குப் பிற்பட்டவையுமாம்.

இக் கவிதைகள் யாவும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை சார்ந்தவை. 1952க்குப் பின்பு முருகையனின் கவிதையில் எழுச்சி பெறும் தமிழ் உணர்வு 1956ல் சிங்களம் மட்டும் அரச கருமமொழியான சூழலில் தமிழ்த் தேசிய இன உணர்வில் முனைப்புப் பெறுகின்றன. எனினும் முருகையனுடைய தமிழ்த் தேசிய உணர்விற்கும் தமிழரசுக் கட்சியினதுக்கும் உள்ள முக்கிய முரண்பாடுகளை அவரது கவிதைகளில் நாம் காண முடியும். சிங்கள மக்கள் பற்றியும் சிங்கள மொழி பற்றியும் தமிழரசுக் கட்சி சார்ந்த பல படைப்பாளிகள் எழுதியவற்றில் இருந்த குரோதம் முருகையனுடைய எழுத்தில் இல்லாமை கவனிக்க உகந்தது. எனவேதான் இக்கவிதைகள் அக்காலத்திற் சு: நூல் வடிவு பெற்றிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.



படிப்பகம்

padippakam

தமிழ்த் தேசியவாதம் முனைப்புப் பெற்றுத் தமிழ் ஈழக்கோரிக்கையை மறுத்தோரெல்லாம் துரோகிகளாகக் காட்டப்பட்ட ஒரு காலத்திலும் அதை அடுத்து விருத்தி பெற்ற போர்ச்சூழலிலும் இவற்றை அவர் வெளியிடவில்லை. அவ்வாறு செய்திருப்பின் அவர் தானும் தமிழ்த் தேசபக்தர்களாக நடித்து தம்மை முக்கியப்படுத்தியோர் வரிசையில் இடம் பெற்றிருக்க முடியும். அவர் அவ்வாறு செய்யாமையும் அக்கவிதைகளை இன்று தமிழ்த் தேசியவாதம் பற்றிய ஒரு நிதானமான பார்வை இயலுமான போது வெளியிட்டுள்ளமையும் அவருடைய அரசியல் நேர்மையையே காட்டுகின்றன. விடுதலைப் புலிகட்கும் அரசாங்கத்திற்கும் எதிரான மோதல் முனைப்புப் பெற்ற ஒரு காலப்பகுதியில் அவரது நிலைப்பாட்டை அடையாளங் காட்டுகிற கவிதைகள் 1984–98 காலத்தின் கவிதைகளிற் காணலாம். விடுதலைப் போராட்டம் பற்றிய அவரது மதிப்பீட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் விடுதலைப் போராளிகள் பற்றி அவர் மிகத் தெளிவாகவே மதிப்பும் மரியாதையும் உடையவராகவே அடையாளம் காணப்படுகிறார்.

அவரது இக்கவிதைகள் அவரைப் பற்றி திட்டமிட்டு பரப்பப்பட்ட அவதூறான `தமிழ்த் துரோகிப்` பழிப்புரைகட்கு ஒரு நல்ல பதிலுரையாகவும் முருகையன் என்ற உன்னதமாக கவிஞரின் உருவாக்கத்திலும் முதிர்விலும் கவித்துவ அடையாளத்திலும் அவரது வாழ்நாட்கால அரசியல் நிகழ்வுகள் ஏற்படுத்திய தாக்கத்தின் பதிவுகளாகவும உள்ளன.

முருகையனின் கவிதை நெஞ்சின் ஆழமான தமிழுணர்வை தமிழ் வெறியினின்று வேறுபடுத்திக்காட்ட மட்டுமல்லாது முருகையன் என்கிற கவிஞர் பற்றிய முழுமையான மதிப்பீட்டை இயலுமாக்கவும் இக்கவிதைத் தொகுதி பெரும் பங்களிக்கும் என்பது நமது நம்பிக்கையாகும்.

எமது பிற நூல்களுக்கு வாசகர்கள் தந்துள்ள பேராதரவு இந்த நூலுக்கும் கிட்டும் என்பது எமது நியாயமான எதிர்பார்ப்பாகும்.

இந்நூலின் கணனி அச்சுப்பதிவில் உதவிய சோபனா சோமசுந்தரம் அச்சிட்ட வெளியீட்டுக்கு உதவிய சி. சிவசேகரம் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

விமர்சனங்களை வழமைபோல் விரும்பி வரவேற்கிறோம்.

தேசிய கலை இலக்கியப் பேரவை
44, மூன்றாம்மாடி
கொ.ம.ச. கூட்டுத்தொகுதி
கொழும்பு–11.
தொலைபேசி : 335844.



படிப்பகம்

padippakam

# முன்னுரை

`நெடும்பகல்`, `மாடும் கயிறுகள் அறுக்கும்`, `நாங்கள் மனிதர்` ஆகிய நூல்களில் என் சிறுகவிதைகள் பல தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இடம்பெறாத கவிதைகள் இனித்தான் புத்தக வடிவு பெற வேண்டும். அவ்வாறான சிறுகவிதைகளின் மற்றொரு தொகுதி இப்பொழுது வெளியாகும் `ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்` எனும் புத்தகம் ஆகும்.

இதில் 50களில் வெளியான என் கவிதைகள் முதலாம் பகுதியில் வருகின்றன. இவை அக்காலத்தில் மக்களின் அக்கறையைப் பெரிதும் உறுத்திய இன ஒடுக்கல் தொடர்பான ஆக்கங்களாகப் பெரும்பாலும் உள்ளமை வெளிப்படை. இவை தான் என் தொடக்க காலப் படைப்புகள் என்பது கவனிக்கத்தக்கது.

இக்கவிதைகளின் உயிர்நிலை இனப்பற்று என்னும் உணர்வு. என்னைப் பொறுத்தவரை இந்த உணர்வு அக்காலத்தில் நம் சூழலிலே தலையெடுத்த மொழிப்பற்று, மொழியன்பு என்பவற்றை மையமாகக் கொண்டே எழலாயிற்று. அன்றைய பள்ளிச் சிறுவர்கள் பாரதி, பாரதிதாசன், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, தேசிக விநாயகம்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆகியோரின் படைப்புகளை விரும்பிப் படித்தவர்கள். இந்தக் கவிதைகளைத் தவிர, ரா. பி. சேதுப்பிள்ளை, சி.என்.அண்ணாதுரை, மு.கருணாநிதி முதலானோரின் ஆக்கங்களும் புத்தகச் சந்தையில் நிறையப் புழங்கின. இவற்றில் வரும் அடுக்குமொழி வசனங்களும் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுகளும் கூட நம்மவரின் வாசிப்புப் பசிக்கு இரைபோட்டன. மொழி அபிமானங்களும் தீவிர முழக்கங்களும் இளவயதினரிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றன. இந்த மொழியின்பத்தின் வசப்பட்டு, கிறங்கி நின்ற என் போன்றோர்க்கு, தமிழின் பெருமையையும் சிறப்பையும் பாடுவது இயல்பாகவே வந்தமைந்த ஒரு `கலைத்தொழில்` ஆயிற்று. இப்போதைய தொகுதியில் இடம்பெறும் தொடக்கப்பாட்டுகள் இந்த ஈடுபாட்டின் வெளிப்பாடுகளாய் உள்ளமை கண்கூடு.

இப்போக்குடன் சேர்த்து, அன்று கொஞ்சங் கொஞ்சமாகத் தலைதூக்கி வந்த ஆட்சி மன்றத் தேர்தல் அரசியலும், கட்சிகளின் போட்டிகளும் இனவெழுச்சி சார்பான கருத்துகளின் ஏற்புக்குத் துணைபோயின. 1953 தொடக்கம் 1956 வரை பல்கலைக்கழகக் கல்வியின் பொருட்டு, யான் கொழும்பிலே தங்க வேண்டிய தேவை எழுந்தது. அப்பொழுது சிங்கள, முஸ்லிம் தோழர்களுடனும் பழக நேர்ந்தமையால், ஏனைய மக்கட் கூட்டத்தினரின் போக்குவாக்குகள் பற்றியும் ஓரளவு விளங்கிக் கொள்வது இயலுமாயிற்று.



படிப்பகம்

padippakam

இதற்கிடையில், 1956இல் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் – சமூகச் சூழலில் ஒரு முக்கியமான திருப்பம் ஏற்பட்டது. தேர்தலில் வென்று அரசுகட்டில் ஏறிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அது வரை ஆட்சி மொழியாய் இருந்த ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அதன் இடத்திலே சிங்கள மொழியை மாத்திரம் அமர்த்திற்று. இச்சட்ட ஆக்கத்தினால், தமிழைத் தாய்மொழியாய்க் கொண்டவர்கள் தாம் வஞ்சிக்கப்பட்டுவிட்டதாக உணர்ந்தனர். இதனுடன் தான் இலங்கையின் இனமுரண்பாடு முனைப்புப் பெற்று மூர்க்கமான வடிவத்தை அடையத் தொடங்கியது. இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்ப்பு இயக்கங்கள் பலவற்றில் ஈடுபடலாயிற்று. அக்கட்சியின் பிரசார வேகங்கள் முடுக்கிவிடப்பட்டன. சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, அறப்போர் என்றெல்லாம் முழக்கங்கள் கேட்கத் தொடங்கின. மேடைப் பேச்சாளர், கட்டுரையாளர், கதைஞர், கவிஞர் அனைவரின் குரல்களும் ஆர்வ வீச்சுடன் வெளிப்பட்டன. இளைய தலைமுறை ஒன்று அய்ம்பத்தைந்தாம், அய்ம்பத்தாறாம் ஆண்டளவில் ஈழத்துக் கவிதைக்களத்தினுட் பிரவேசித்தது. துடிப்புடன் எழுச்சியும் மிக்க இக்கூட்டத்தவரிற் பெரும்பாலோர் – நீலாவணன், கா.சி.ஆனந்தன், வி.கி.இராஜதுரை, சில்லையூர் செல்வராசன் – நானும் கூட – இனவழி விடுதலை நாட்டம் படைத்தவர்களாக இருந்தோம். இவர்களுடைய கையிலே கவிதைத்தமிழ் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாய் உருவாகிற்று. "மஹாகவி"யும் சில இனவிடுதலைப் பாட்டுகளை எழுதினார்.

இந்தப் புதிய அலையின் ஓர் அம்சமாகவே இந்தத் தொகுதியிலுள்ள முதலாம் பகுதியின் ஆக்கங்கள் அமைகின்றன. எனினும் இபபகுதியின் இறுதிப் பாகத்திலே, இனவிடுதலை இயக்கத்தின் சில தடுமாற்றங்களும் சஞ்சலங்களும் தோற்றுவித்த தயக்க மயக்கங்களை விமரிசனம் செய்யும் கவிதைகளும் உள்ளன. 'வெட்கம் கொள்ளுக', 'யாத்திரை பலவகை' ஆகிய உருப்படிகளை நோக்குக. 'பண்ணுங்கோ தமிங்களத்தை', 'நண்டு விடு தூது', 'வாரும் எங்களுக்குள்ளே ஓர் மற்புரிந்து மாளுவோம்' என்பவற்றிலுள்ள கிண்டலும் குறும்பும் அதிருப்தி ஒன்றினை நோக்கிய ஒரு திருப்பத்தின் முன்னறிவிப்புகளாகக் கொள்ளத்தக்கனவே.

இனி இரண்டாம் பகுதிக்கு வருவோம். இப்பகுதியில் உள்ள பாட்டுகள் 1984 – 1998 காலப் பகுதிக்கு உரியவை. இங்கு ஒரு சிறு விளக்கம் அவசியமாகின்றது. முதலாம் பகுதி 1957 உடன் முடிய, இரண்டாம் பகுதி 1984 உடன் தொடங்குகிறது. அதாவது, 27 ஆண்டுகால இடைவெளி ஒன்று காணப்படுகிறது. இது ஏன் என்றொரு கேள்வி வாசகர் நெஞ்சங்களில் எழலாம். தமிழ்க் கட்சிகளின் அரசியலில் அதிருப்தி கொண்ட ஒரு நிலையில், நம்மிற் கணிசமான ஒரு தொகையினரின் பார்வை, இன நலத்தினையும் உள்ளடக்கி, அதனைவிட விரிந்து பரந்த பொதுமையறத்தை நோக்கி விரைந்தது. அதனால், ஒடுக்கலுக்கும், சுரண்டலுக்கும் உள்ளாகும் அனைவருமே விடுவிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேலோங்க வேண்டும் என்னும் உணர்வு அழுத்தம் பெற்றது.



படிப்பகம்

padippakam

நசுக்கப்படுவோர் பற்றிய கவலைகள் சமூக விமரிசனங்களாகவும் அறிவு விழிப்பை நோக்கிய உந்தல்களாகவும் வெளிப்படலாயின. இத்தகைய உள்ளடக்கம் கொண்ட சிறுகவிதைகள் 'நாங்கள் மனிதர்கள்' தொகுதியில் ஆறாம் பகுதியில் இடம்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. மேற்சுட்டியவாறான 27 ஆண்டு இடைவெளி ஒன்று தோற்றம் தருவது இதனாலே தான்.

இந்நூலின் இரண்டாம் பகுதியில், ஒரு 14 ஆண்டு காலப்பரப்பிலே தோன்றிய என் கவிதைகள் சிலவற்றைக் காணலாம். முதலாம் பகுதி கவிதைகள் பலவும் இனநலம் தழுவியவையாய் இருப்பது கண்கூடு. எனவே, இரண்டாம் பகுதியிலும் – காலப்போக்கில் முறுகித்திரண்டு விசுவரூபம் பெற்று நிற்கும் இனமுரண்பாட்டினைத் தொடுவனவாய் அமைந்த ஆக்கங்களை இணைத்துக் கொள்வது, இத்தொகுதியின் உள்ளடக்க ஒருமைக்கு உதவும் என்று கருதி அவ்வாறு செய்துள்ளோம். இவ்வாறான ஆக்கங்கள் மிகப்பல கைவசம் இருப்பதனால், அவற்றிலிருந்து சிலவற்றை மாத்திரம் தெரிந்தெடுத்து வெளியிடுவதுதான் இப்போது சாத்தியமாகியுள்ளது.

இரண்டாம் பகுதி தழுவி நிற்கும் காலப்பகுதி நெடியதொரு நரக வேதனை ஆக, தமிழினத்தாருக்கு மட்டுமன்றி ஏனைய சாராருக்கும் அமைந்துவிட்டது. 'நீரும் நெருப்பும்' ஆக மட்டுமல்லாமல், சிதறிய சீவியங்களுக்குக் காலாகி, கண்ணீரும் வெப்ப மூச்சும், கதறலும் பதைப்பும் சாவும், வெண்ணீற்றுச் சாம்பல் மேடும் விளைத்து, இந்த நாட்டு மக்கள் சகலரையும் உலுக்கிக் குலுக்கிக் கொண்டு முடிவின்றி நீண்டு செல்கிறது. 'இனமேன்மை வாதக் குறு நலப்பித்தம்' முற்றிவிட்டதன் அறிகுறியே இது என்று நாம் ஒரு சூத்திரத்தைச் சொல்லி 'விளக்கம்' தேடலாம். ஆனால், இவ்வாறான சூத்திரிப்புக்கள் பல நூறை நாம் கண்டு கொண்டாலும், தூலமான வரலாற்று நிலைமைகளையும் அவற்றின் ஏதுக்களையும் விளங்கிச் செயற்பட்டாலொழிய 'அமைதி காணல்' வெறும் கானல் நீராகவே நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கும்.

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
என்று முடியும் இந்த அடிமையின் மோகம்
என்று எமது அன்னை கை விலங்குகள் போகும்
என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய் ஆகும்'

என எட்டையபுரப் பாவலன் கொண்ட அதே ஏக்கம் இப்பொழுது நம்மையும் வருத்திக்கொண்டிருக்கிறது. அந்த ஏக்கத்தின் எதிரொலியாய் நம் நெஞ்சங்களில் எழும் ஓசை தான் – 'இந்த மண்ணின் ஒவ்வொரு புல்லையும்/ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம்/இங்கு தோன்றும் ஒவ்வொரு பிள்ளையும் இறைவன் ஆவதை நாடுகிறோம்/ இறைவி ஆகவும் இறைவன் ஆகவும் இலங்கும் சூழ்நிலை தேடுகிறோம்/இறைமை நீதியின் எதிரி தூள்பட எறியும் ஓர் நெறி/சேருகிறோம்.'

**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி, இலங்கை.** **இ. முருகையன்.**



படிப்பகம்

padippakam

# உள்ளிருப்பு

பக்கம்

1

உயிரின் வேகம் 1
தாயின் காட்சி 2
தமிழ்ச் சொற்கள் 5
அந்தோ தமிழகமே 6
அழைப்பொலி 8
சுதிர்காம தெய்யோ 10
சீற்ற மனத்தினர் ஆகிய நண்பர்கள் 12
ஒரு பெரு முழக்கம் 16
பகை வேர் அற ஒரு போர் 18
பீடை ஒழிப்பாய் 20
இணைப்பரசாட்சி உதிக்கும் 23
ஒரு முனையில் திரள்க 25
வாருங்கள் சட்டம் மறுக்க 27
தானை நடத்துக 29
நாசமாகின்றது கொடுங்கோல் 31
உயர்த்துக உன் கொடி 34
நாம் அதற்குச் சீறுவதோ 36
வெல்வது திண்ணம் 39
விடிபொழுது தொலைவில் இல்லை 42
வெற்றிக்கு விழா 45
விடிவு 48
வாரும் எங்களுக்குள்ளே ஓர் மற்புரிந்து மாளுவோம் 51
பண்ணுங்கோ தமிங்களத்தை 54
நண்டு விடு தூது 57
வெட்கம் கொள்ளுக 60
யாத்திரை பலவகை 62

2

நீரும் நெருப்பும் 66
சிதறிய சீவியங்கள் 67
எங்கள் முற்றம் 69
பாற்கடல் 70
ஆவல் 71
கூத்து 72
மதம் 74
குறுநலப் பித்தம் 76
காதினிலே விழும் கீதம் 80
ஓவியம் 82
இடைவெளிகள் 84
பிரிப்பது மானம் ஒன்றே 86
விலை மதிப்பு 87
கழுதையின் காதுகள் 89
மூல மந்திரம் 91
கூவும் சேவல்கள் 93
இந்த மண்ணின் ஒவ்வொரு கல்லையும்... 96

படிப்பகம்

padippakam

# 1

# உயிரின் வேதம்

## 1952 - 1957

படிப்பகம்

padippakam

# உயிரின் வேகம்

புதுமை நூல்கள் குவியும் வேகம்
புகலலாமோ, நன்று நன்று!
மதுவை வெல் நின் சுவையை இங்கு
வரையலாமோ, இனிமை இனிமை!

எதனை நின்றன் உவமை என்பேன்?
எங்கள் இன்ப கீதம் நீயே
மதியம் சொரியும் ஒளியும் நீயே
மகர யாழின் இசையும் நீயே!

தென்றல் தழுவும் மரத்தின் மேலே
சேரும் குயிலின் குரலும் நீயே
குன்றின் மீது தாளம் போடும்
குளிர்மை அருவி ஒலியும் நீயே!

அரியை, நின்றன் இனிமையாலே
அள்ளி விட்டாய் உள்ளமெல்லாம்
பெருமை அன்றோ கொள்ளுகின்றோம் –
பேச நின்றன் உயர்வை எல்லாம்

தமிழிலன்றோ அரிய செல்வம்?
தகைமை கூறும் இனிய நூல்கள்!
தமிழிலன்றோ உண்மை ஞானம்,
தளர்வு போக்கும் அரிய வாய்மை!

தமிழிதன்றோ பெருமை மூச்சு,
தங்கமன்றோ கவிதை வெள்ளம்,
தமிழிதன்றோ நெஞ்சில் உண்மைத்
தமிழன் கொள்ளும் உயிரின் வேகம்!

1952



படிப்பகம்

padippakam

# தாயின் காட்சி

அம்மா அருந்தமிழே, அழகே
இனிமை என
இம்மாநிலம் போற்று இருந்த
அழகினை நான்
செம்மை சேர் நின் பொலிவைச்
சென்று இரவு கண்டேன்
உண்மை தான் !

முருகையான்



படிப்பகம்

ஓர் கனவு
உளம் களிப்பாய், சொல்லுகிறேன்

சூழும் இனிமை நிறை சோலை ஒன்று
– பண்டிருந்த
ஈழமுந் தென்னாடும் என்பெனோ
– அதன் அழகை!
யாழின் இனிமையை வெல்
மொழிபேசும் பல கிளிகள்
வாழும், தமிழ்த்தாயே,
வாக்கியங்கள் பல பாடும்
என்ன மொழியினிலே?
இன்பத் தமிழ் மொழியில்
கன்னலும் கற்கண்டும் கரைந்தொழுகும்
சுவையம்மா!
அன்னையே, அது மட்டோ?
அங்கு களிப்புடனே
புன்னகையே பூத்துப் பொலிந்த
பல செடிகள்
மகிழ்வு கொண்டே பூத்திலங்கும்
மலர்களிலே, காலை இளம்
பகலவனைப் பழிக்கும் ஒளி
பார்த்தேன், கண் கூசியதே!
அகமகிழும் தமிழ் ஒளி தான்
அது என்றது என் நெஞ்சம்
புகழுடையாய்,
அப்பாலே போனேன் நான்
அப்போதில் –
அமைதி நிலவுகிற அந்த நல்ல
சூழலிலே
அமையும் ஒரு கூடம் –
நான்
அங்கும் தான் போய்ப்பார்த்தேன் –
தமிழே தவழ்ந்ததம்மா!
தமிழ் நூல்கள் எத்தனையோ!
கமழும் அறிவு மணம்
கடவுள் நூல் –
அவற்றுடனே

padippakam

மேலைக் கலை அறிவும் மிளிர்ந்ததம்மா,
நின் மடியில்
சாலைச் சிறுவர் எலாம் தமிழைத்தான்
காமுறுவார்
மேலுற்ற அரசியலார் மேன்மை கொளும்
செந்தமிழின்
மேல் வைத்த அன்பாலோ –
விளங்கியது அவ்வருட்காட்சி!

நுண்ணறிவுக் களஞ்சியமாம் நூல் நிலையம்
நீங்கி
வெளிக் –
கண் சென்றேன் –
காவினிலே களிப்போடு இளஞ் சிறுவர்
உள் மகிழ்வால் விளையாடும்
உயர் காட்சி
மிக இனிது!
எண்ணி மனம் பூரித்தேன்
'ஏன் தூக்கம் இன்னும்?' எனும்
குரல் கேட்டேன்
கண்ணைக் கசக்கினேன்
என்னுடைய
விரல்களினால் –
நெடுந்தூக்கம் விட்டோடிப்
போனதுவே!

அரியதொரு காட்சி அற்றதுவே
விடிந்ததனால்!

வருவதைத்தான் கண்டேனோ,
கண்டேனோ,
தமிழ்த் தாயே?

'வாழிய அன்னை'.

1952



படிப்பகம்

padippakam

# தமிழ்ச் சொற்கள்

குளிரும் நெஞ்சினில்
குன்றொளிர் சிகரக் கொடுமுடிகளின்
பனிப்புகை மீதில்,
தளிரின் மஞ்சள் குருத்தினில்
ஒயிலாய்த் தவழுகின்ற பளபள ஒளியில்
ஒளிரும் அம்புலிச் சந்திர வட்டம்
உதவுகின்ற ஒளி நல எழிலில்,
வளரும் இன்ப மலர்ச்செடி
வாழ
வார்த்த நீரில் —
மகிழ் தமிழ்ச் சொற்கள்!

உண்ட பின்னர்
நண்பகல் வெயிற் சூட்டின்
உறக்கமே என
மண்டிய நெஞ்சில்
கொண்டு வந்து களிப்பினைப் பூசி,
குதூகலத்தின் நெடுந்திரை வீசி,
கண்டென,
கனிச் சுவை என,
தேனின்
காலைப் பொன் ஒளிப்
பூச்செனத் தோன்றி,
விண்டு இதழ் திறந்து ஒளிரும்
நித்திலம் போல்
மெல்லெனச் சிரிப்பன —
தமிழ்ச் சொற்கள்

1953



முருகையன்

படிப்பகம்

padippakam

# அந்தோ தமிழகமே

புதுமை என்றா சொல்லுகிறான்?
விட்டுத் தள்ளு
புட்பக விமானம் தமிழ்ச் சொத்துத்தானே!
இதை மறுப்பான் யார்?
அவனைக் கேள், இக் கேள்வி –
இராவணன் ஓர் தமிழன் அன்றோ?
ஏனோ அய்யம்?
முதல் முதலில் தமிழனடா உலகில்
வாழ்ந்தான்!
முதற்குரங்கு தமிழ்க்குரங்கு –
சாட்சி கூறும்
இது அன்றோ உனது நிலை,
தமிழர் நாடே?
ஏன் இன்னும்
வீண் பெருமை பேசுகின்றாய்?

வீண் பெருமை, தமிழகமே –
வேறு ஒன்றில்லை
விழுந்து மறைந்து ஒளிந்திருக்கும்
பண்பாடொன்றை –
கூண்டிருக்க உயிர் உறங்கும்
கோதுச் சவ்வைக்
கொண்டாடிப் பூமாலை சூட்டுகின்றோம்
ஆண்டு பல ஆயிரங்கள் முன்பும்
வாழ்ந்த
அருந்தமிழுக்கு அவமானம் நமது செய்கை
வேண்டாம் இத் தற்கொலைகள்.
தமிழர் நாடே,
விடுவோம், வீண் பெருமை மொழிப்
பசப்பை எல்லாம்.



படிப்பகம்

padippakam

மேல் நாட்டில் வளர் கலைகள்
இல்லை,
எங்கள் மேன்மையுறு தமிழ் மொழியில் –
ஆனால், என்ன?
வால்கட்டித் தமிழுக்கு வாழ்த்துப்
பாட வாழுகிறோம், பல பேர்கள்
குறைவே இல்லை.
சூல் உற்ற கருமேகம் போல,
குப்பை சொரிவதற்கு வாழுகிது –
கலைஞர் கூட்டம்
`சால நன்று` எனும்படியாய் –
புதுமை காணும்
தமிழன் இல்லை –
அறிவியலை ஆய்வான் இல்லை.

சமயநெறி ஒழுக்கங்கள் கொன்று
விட்டோம்
தமிழ்ப் பண்புச் சொற்பொழிவா?
குறைவே இல்லை
அமைதியிலே சிந்திப்பான்
ஒருவன் இல்லை.
ஆத்திரத்தில் எதுகையுடன் மோனை
மோதும்.

தமிழகமே,
உனது நிலை நன்று, நன்று!
சரியான பாதையிலே தான்
போகின்றாய்
தமிழகமே
என் நாடே
நினைத்துப் பாராய்
தாய் பொருட்டு,
தமிழ் பொருட்டு நினைத்துப்
பார் நீ.

1953



படிப்பகம்

padippakam

# அழைப்பொலி

ஊரிடம் தொறும் மாடங்கள் நின்றதும்
உயர்ந்த கோபுரம் வானம் பிளந்ததும்
சேரன் சோழனும் பாண்டிய மன்னனும்
செம்மை சேர் தமிழ்த் தேன்சுவை கண்டதும்
நீர் வழிந்து வளம்பெற ஓடலும்
நெல்மணிக் குவை எங்கும் பொலிந்ததும்
யாரும் எங்கும் தலை நிமிர்ந்து ஓதுதல்
எங்கும் கண்டுளோம்: எங்கணும் கேட்டுளோம்.

கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததைக்
காட்டிக் காட்டி வாய் ஊறி நின்றோமடா!
செம்பொருட் சிலம்பின் கதை பாடிய
சேரனுக்குத் திருவிழாச் செய்கிறோம்:
அம்புவிக்கொரு நூல் தரு வள்ளுவன் —
அவனை எண்ணி நினைவு குளிர்கிறோம்
நம் புதுத் தமிழ் மக்களே.
சொந்தமாய்
நாங்கள் ஏதுமே நல்லது செய்தமா?

முருகையன்



படிப்பகம்

padippakam

பழங்கணக்கைத் திருப்பித் திருப்பியே
பார்த்துப் பார்த்து
வாய் ஊறி நின்றோமடா!
எழுந்து சுற்றிலும் நாற்புறம் நோக்கினால்,
எல்லையற்றதோர் வேகமுடன்,
அதோ,
விழுந்தடித்து, முன்னேற்றம் என்று
ஓர் வழி
விரைந்து சென்றிடும் காலத்தைக் காணலாம்.
உளம் தனிற் கொண்டு இவைகளை,
நாங்களும்
உயர்தல் வேண்டுமே!
காலம் விரையுது.

வெற்று வாயினை மெல்லுதல் அன்றி
ஓர் மேன்மைச் செய்கை
இங்கு ஒன்றுமே இல்லை:
ஓ!
பற்றி உன் பிடர் தள்ளி ஒதுக்கியே
'பாத பூசை செய்!' என்பவர் செய்கையை
வெற்றிவேல் அறப்போரில்
இடந்து எறி.
வீணர் தம் செயல் பார்த்தும் இருப்பதா?
கொற்ற வெம் முரசு
ஆர்த்தெழும் ஓசையில்
கொட்டுகின்ற அழைப்பொலி
கேட்குதா?

1954



படிப்பகம்

padippakam

# கதிர்காம தெய்யோ!

அய்யா, கதிரை அழகு மலையிற்
குடியிருக்கும்
தெய்யோ, வணக்கம்
இச் சிங்களத் தீவகத்
தென்புறத்தோய்,
உய்வார்கள் உய்யும் வகையே
உயர்ந்து, மேல் உய்யும்படி
செய்வாய், இது கேள்: ஓர் சிங்களம்
ஆட்சி மொழி, இனிமேல்.

என்ன, உனக்கு அம்மொழியா
தெரியாது? இவ்வீழமிசைப்
பெண்ணும் பெரிய பெரும்பான்மை
யோர் மொழி சிங்களமே!
தொன்மைத் தமிழன் துதித்துப்
பணிய அருள் வழங்கும்
சின்னக் குழந்தை தமிழ்த் தெய்வம்
என்று உனைச் செப்புவர் தான்.



படிப்பகம்

தயவு செய்து இந்தத் தமிழை
மறந்து இனிச் சிங்களத்தை
அயன்ன இயன்ன என்று
ஆறாம் வகுப்பு வரை படித்தால்
உயர்வு கியர்வு கிடைக்கவும்
கூடும்; நான் உன்னுடைய
நயமே நினைத்து இந்த வார்த்தைகள்
சொன்னேன், நன்றாய்க் கவனி.

சிங்கள மூலமே வேண்டுதல்
செய்வர், அச் செம்மொழியை
உன் கண்டனைய தமிழிற்
பெயர்க்க ஒருவருமே
இங்கே கிடைக்கார்;
இனிமேல், தமிழ் மொழி ஈழத்திலே
தங்க விடார்கள்; தமிழை மற,
கதிர்காம தெய்யோ!

சொன்னேன் அறிக: நீ சும்மா
தமிழோடு அழுவதை விட்டு
இந்நாள் தொடக்கம் இவர்கள்
மொழியே படித்திடுக;
முன்னால் இதோ, ஒரு நோட்டீசு
தந்தேன்; முருக, இனிக்
கன்னா பின்னா என்று
கத்திப் பயனென்ன?
கால நெறி!

ஏலாது என நீ உரைக்கத்
துணியாய்;
இனியும் உன்றன்
வாலேன் அசைப்பாய்?
வரும் பயன் என்ன, வரதப்பனே!
வேலேன் உனக்கு? விறலேன்?
இலங்கைத் திருப்பதியில்
காலூன்றி நிற்கக் கருத்துண்டேல்...
வேலைக் கடலில் எறி.

(கண்டனைய - கற்கண்டு போன்ற)

1952

padippakam

# சீற்ற மனத்தினர் ஆகிய நண்பர்கள

நமதயல் வாழ்கின்ற சோதரர்
நம்மிசை அன்புடையர்
நன்மை பலப்பல செய்ய
முனைந்துளர்
நம்முடைய
தமிழ் மொழி வாழ்வது
நிச்சயம் என்பது அறிந்தமையால்
தம்மொழி வாழ அடுக்குகள்
செய்வது நல்லது தான்
'தெமல' மொழிக்கிடையூறுகள்
செய்து சிரிப்பதனால்
சிங்களம்
இன்னும் உயர்ந்து வளர்ந்திடும்
என்பது தான்
அவர்களின் எண்ணம் –
ஒரே ஒரு தப்பு
அதனால் எமது



படிப்பகம்

ஆழ்ந்த இரக்கம் அவர்க்கு
உளதாகுக
பாவம், அவர்!

வேறொரு செய்ய வியன்மொழி
கொன்று
சவக்குழியை வெட்டி
அதற்குள் விழுத்திடின்
நல் எரு வாய்க்கும் எனக்
கூறி இவர்கள் முனைந்துள
செய்கை விசித்திரமே!
குள்ள மனத்திறம்
மெள்ள வெளிப்படுகின்றதுவோ?
ஊறுகள் செய்து
இன வெம்பகை கொண்டு சினந்திடுதல்
ஒன்றுபடும் புவி மீதில்
இடம்பெறல் இல்லை, இனி
சீறி எழுந்திடல் நல்லதும் அல்ல
இவர்களது
சிங்கள நன்மொழி கூட
மனம் புகைகின்றதுவே!

ஈழமிசைப் பல ஆயிர காலம்
இருந்த சகிக்கு
இன்னல் விளைக்க எழுந்துள
மைந்தரை எண்ணி
நிதம்
மீள்விலதாகிய வெந்துயர் வீழ்ந்து
உயிர் விம்முகிறாள் –
மேன்மையிலே குறைவு ஒன்றும்
இலாததோர் சிங்களத் தாய்.
தோழர்களாய் இணை மாற
நினைந்திலர் ஆகி மனம்
தூயவராய் இதுகாறும் இருந்தனர்
இன்று உறவைப்
பாழ் செய என்று கிளம்பினர் –
சிங்கள மைந்தர்களே!
பற்றி எரிந்திடல் நல்லதுவோ –
பகை வெய்ய கனல்?

padippakam

செய்வது யாவது, சொல்வது
யாதென ஓர்ந்திலராய்,
சிங்கள நண்பர்கள் வெள்ளுரை
விள்ளுகிறார் —
விழலில்:
உய்வழி ஏதென ஒன்றும்
அறிந்திலர் போலும், அவர்
ஓதுவதன் பொருளே அறியார்
வெகு வேகமுடன்
கொய்து எமது இன்மொழி
எற்றி எறிந்து
எழில் ஈழம் எனும்
கொல்லையை விட்டு அகல்வித்து
அதை வீசிட எண்ணுவரேல்...
ஐய, அவர்களது எண்ணமும்
உன்னதமானது தான்!
ஆச்சரியம் தரும் அன்னவர்
சிந்தனை போன வழி.

ஏன், இவண் உள்ள
தமிழ் மொழி பேசிடுகின்றவர்களுக்கு
இல்லை விழித்துணை என்று
நினைத்தனரோ — அவர்கள்?
மானம் எனும் பொருள் அற்றவர்
என்று நினைத்தனரோ?
வாழ்வர், தமிழ் மொழி வாழின் —
அவர்களும் என்பதனால்,
ஏனை இனத்தவர் போல
உரித்துகள் பெற்றிடலே
இங்கிவர் தங்கள் பிறப்புரிமை
என எண்ணுகிறார்.

கூனி ஒதுங்கி வளைந்து
குறுகிட ஒப்புவரோ?
கொஞ்சம் இவற்றினை நண்பர்கள்
எண்ணுதல் நல்லது தான்.

மொழியை வளர்க்க இவர்கள்
நினைக்கும் முறைமைகளோ



படிப்பகம்

முழுதும் அபத்தம்
அயல் மொழி வெட்டி அகழ்ந்து
இடறி
அழிவை இயற்றுதல்
மொழியை வளர்த்திடும் ஓர் பணியா?
அளவில் வளத்தினை
'அழிவு' தரப் பெறல் சாத்தியமா?
கழிவிவர் புத்தி எனவும்
ஒதுக்குதல் கூடுமெனில்,
கயிறு கழுத்தினில் இட
நினைவுற்றனரே — இவர்கள்!
குளறி உயர்த்திய
குரலை எழுப்பி, இனப்பகையைக்
கொளுவ முயற்சிகள் நடைபெறல்
சற்றும் உகந்ததுவோ?

ஏற்ற நெறிக்கு இவர்
மீட்டும் அணைந்திடுவர் எனிலோ
எத்தனை நல்லது?
உத்தம இன்பம் உதித்துவிடும்!
தோற்ற —
உயர்வுகள், பூத்திட அன்பு
துலங்க அறம்,
துன்ப நெடுங்கிளை தன்னை
இடுங்கி எறிந்துவிட
ஊற்றெழுகின்ற மகிழ்ச்சி
எனும் புனல் ஊடு திளைத்து
உள்ள மலர்ச்சியை உற்றிடல்
கூடும்
இவர்கள் எனில்,
சீற்ற மனத்தினர்
ஆகி அழல்கிற சிந்தையினார்
செய்வது யாவது,
சொல்வது யாதென
ஓர்வதிலார்.

(ஊறுகள்-இடையூறுகள், வெள்ளுரை-வெட்டிப் பேச்சு, ஓர்தல்-உணர்தல)

1956

padippakam

# ஒரு பெரு முழக்கம்

சிலுசிலுத் துவகை தூவும்
தென்றல் வந்துலாவும் சோலை
மலர்களின் வனப்பைத் தீட்ட
வாய்த்தது எம் தமிழே!
இந்த
மலர்களின் வனப்பைத் தீட்டும்
மட்டிலே நிற்குமோ?
தன்
குலமுழுதுரிமை எய்தக்
கூவிடும் கவிதையாக.

மெல்லியல் ஒயிலார் சாயல்
வில்விழி வளைவின் கோணம்
முல்லையின் நகையை வெல்லும்
முறுவலைப் படம் செய்கின்ற
சொல்லுள தமிழே,
இன்று
துவண்டிடும் உரிமை வாழ்வு
வெல்ல வல்லொலியில் இன்னே
விளைத்திடும் வீர ஓசை.

நிலாக்கதிர் நுழைந்தூடாடும்
நிமிர் அரமியத்தில்.
பெண்கள்
விலாப்புறம் நோக்கி வீசும்
வேல்விழிப் புதுமை தன்னைப்
பலாப்பழம் கனிந்த சொல்லிற்
பாடும் ஓர் தமிழே.
இன்று
வலோற்கர மனிதர் செய்கை
மாய்த்திடச் சினந்து சீறும்.

காலத்தின் தாக்கம் வென்ற
கவிதையாய், நல்ல வாழ்வுச்
சீலத்தைப் படைத்துத் தந்த



படிப்பகம்

padippakam

செந்தமிழ்ச் சொல்லே,
இன்று
சீலத்தைச் சொல்லும் அந்தச்
சேவையைச் செய்வதோடு
கீலமாய்க் கிழிந்து போன
உரிமையைப் புதுக்க ஏங்கும்.

கல்லையே களிமண் போலக்
கை வலி கொண்டு மாற்ற
வல்ல சிற்பிகளோ டன்று
வாழ்ந்த செந்தமிழே,
இன்று
வல்லடி வழக்குப் பேசும்
மடமையோர் சுயமை வீழ்த்தி
நல்ல சீர் இதயம் தோன்ற
நவின்றிடும், உரிமை வார்த்தை.

திண்புயம், திரண்ட மார்பு
தீ நிகர் கூர்மை நோக்கு,
கொண்ட காளைகளின் தீரம்
கூறிடும் தமிழே,
இன்று
பிண்டுடைந்து ஒழியப் பார்க்கும்
பெருமையை –
இனத்தின் மாண்பை
விண்டுரைத்திட முன்னிற்கும் –
விறுவிறுப்பான சொல்லில்.

யாழொலி மீட்டி,
மாதர்
ஏழிசை பாட்டில் ஓதும்
தாழிசை இனிமையாகச்
சமைந்த செந்தமிழே,
இன்று
வாழ்வினில் உரிமை வற்றி
வரண்டமை கண்டு
ஆவேசத்து
ஊழி வெங்கனலே போல
ஒரு பெரு முழக்கம் செய்யும்.

(அரமியம் - நிலாமுற்றம்)

1957



படிப்பகம்

padippakam

# பகை வேர் அற ஒரு போர்

அமுதொன்றிய தமிழ் என்பதை
அவர் கொன்றிட முனைவார்
அது கண்டு உயிர் சுமை கொண்டு
இனி அழியார்
தமிழ் மைந்தர்
குமுறும் கடல் தனை வென்றதோர்
குரலில் – ஒரு குரலில்:
'கொடும் எங்களின் உரிமை!'
எனக்
கொள்வோம்
ஒரு போரில்.

மொழியே உயிர்: முதலாவது.
முடிவாவதும் அதுவே.
முடியாது –
அதை விடவா?
சமர் முரசே அறை தமிழா!
விழியே மொழி
ஒரு போதிலும்
மிதிகாலிடல் சகியோம்.
மிக வேதனை அடைவார் –
மொழி



படிப்பகம்

padippakam

விலை பேசிட முனைவார்.

சிறுபாலவர்
திகழ் தீயினை நிகர் சிந்தைகள்
புகையின்,
சிறு தீவிதன் கதி யாவது?
சிதறா, உயிர் குமுறும்
நிறுதூளிகள் படும் ஈழமும்
நெரியா உயிர் கருகும்
நினையார் – குறுகிய பார்வையர்
நிறை தீமைகள் புரிவார்.

தலை கால் திசை புரியாதவர்
தமிழ் மீது சருவுவார்
சனநாயக நெறி நேர்மைகள்
தமை மீறுதல் புரிவார்
அலைபோல் எழு, தமிழா!
கொடும்
அநியாயம் இது அடுவாய்
அற நேர்வழி தனில் ஓர் சமர் –
அது நீதியை உதவும்.

சகியார், தமிழ் மொழியோர் இவை
சரி நீதிகள் விழைவார்
சதிகாரரின் வலை சாடுவார்
தணியார் அது வரையும்
பகை வேரற ஒரு போர் –
படை,
பல ஆயுதம் இலவாட்,
பசிதாகிய அறநேர்மையின்
பலமே கொடு புரிவாய்.

(சிறுபாலவர் - சிறுபான்மையோர், சிதறா - சிதறி,

நெரியா - நெரிந்து)

1956



படிப்பகம்

padippakam

# பீடை ஒழிப்பாய்

செய்ய தமிழ்க்கு
ஓர் சிந்தனை அற்ற
சிறியோர்கள்
எய்திடுகின்றார் – வெய்ய சரங்கள்
இவை வந்து
'தைபட விட்டார் தண்டமிழர்கள்'
எனும் அந்த
வெய்ய பழிக்கு ஆள்வதுவோ?
சீ, விடுவாயோ?

கல்லோயாவைக் காலிகள்
தங்கள் சுயமைக்கும்
பொல்லாங்குக்கும் போக்கிடமாக்கிப்
போட்டார்கள்
நல்லோய்,
தொன்மைச் செந்தமிழ் பேசும்
நயம் மிக்கோய்,



படிப்பகம்

வெல்லாயோ இவ்வீணரை,
அன்பால் – அறமொன்றால்?

நீதிகள் தம்மை –
நேர்மையை –
ஆட்சி நியமத்தை –
பேதமை கொண்டோர்
யோசனை இன்றிப் பேர்க்கின்றார்.
ஓதுவதென்னோ?
உண்மை பிளந்தே
உடைபட்டுப் போதல் அறிந்தோம்
பூசுவர் சொல்லால் –
புருடாவே!

மக்களின் ஆட்சி மன்றெனும்
அந்தச் சபை தன்னில்
"தக்கவர்" உண்டு
தர்க்கமும் உண்டு
தலைவர்கள்
உக்கிரமான சொற்பொழிகின்ற
உரை உண்டு
வக்கணை உண்டு –
வாய்மையொடு
அன்பு வளம் இல்லை.

கூசுதல் இல்லை –
கொள்கைகளில் நற்குணமில்லை
காய் சினம் ஒன்றே
கையிடை உண்டு
கடை, சந்தி –
பூசல்கள் கொண்டு போகவும்
இன்னல் பொழிகின்றோர்
ஏசி எதிர்க்கும் ஈனர்கள்

padippakam

உள்ளார் –
ஈழத்தில்!

ஆட்சி இருந்தென்?
ஆட்பலம் மிக்க படையால் என்?
மாட்சிமை மிக்க மந்திரிமார்கள்
வாழ்ந்தென்ன?
தாட்சணியத்தைத் தாங்கி வளர்க்கும்
தலை கொண்ட
ஆட்கள் இருந்தென் –
ஆற்றல் இழந்தால்,
அறம் –
இங்கே?

பொய்ம்மை, அறத்தைப்
போர்த்திடுமாயின்,
பொலிசார் ஏன்?
மைம்மல் இருட்டு
வந்தது கண்டோம்.
இரவின் பொய் மைய இருட்டு.
சாம இருட்டு
வருமுன்னே
உய்வழி ஒன்றே
ஒற்றுமையாக உருவாக்கு.

கூடி எதிர்ப்பாய்,
செந்தமிழ் மைந்தா –
குலம் ஒன்றாய்
கேடுபடுத்தும் கீழவர் செய்கை
கிழிபட்டுச்
சாடுதல் பட்டுச் சாய்வது பெற்றுச்
சரியட்டும்
பீடை ஒழிப்பாய் –
பேரறம் ஒன்றே
துணையாக.

(சாடுதல் பட்டு - அடிபட்டு)

1956



படிப்பகம்

padippakam

# இணைப்பரசாட்சி உதிக்கும்

எங்கள் உயிர் தமிழ் என்றே
இன்னும் உணர்ந்து கொள்ளாத
சிங்கள நண்பர்கள், பாவம்,
தீ மிசை நெய் பெய்கிறார்கள்
பங்கம் இழைத்தெம் மொழிக்குப்
பாதகமானவை செய்தால்
பொங்கி எழுந்து அறப்பாதைப்
போர் தொடுப்பார் தமிழ் மக்கள்.

அன்பின் படைகளைக் கொண்டு
ஆட்சியினோர் செய்யும் மிண்டு
என்பவை யாவையும் சாய
ஈனக் கயமைகள் மாய,
தன்பெரு வன்மையைக் காட்டித்
தாவி எழுந்திடும் — கேட்டுப்
புன்மைகள் தீர்த்துயிர் வாழப்
போகும் தமிழினம், ஈண்டு.

'மொழியை முதற் கொலை செய்யின்,
மூதின வன்மைகள் பிய்யும்;
அழியும் தமிழினம் ஈழத்து;
ஆகையினால் அவர் ஆளல்
எளிது' என எண்ணினர் போலும்
இங்குள சிங்கள நண்பர்!
விழியைப் பிடுங்கினர் ஆயின்,
விட்டுக் கொடுப்பவர் யாவர்?

முருகையன்



படிப்பகம்

padippakam

தூங்கின காலத்தை என்றோ
தோண்டிப் புதைத்தனம் அன்றோ?
வீங்கிய திண்புயத்தோடு
மெய்ம்மை அறப்பலம் கூட,
தாங்கிய வீரக் கொடிக்கை
தாயின் விலங்கை ஒடிக்கும்
ஏங்கி இருந்திட மாட்டோம்
ஈனர் எனும் வசை ஈட்டோம்.

கழுத்தை நெரிப்பவர் கையைக்
கண்டு சும்மா இருப்போமா?
உழுத்த பலத்தினர் அல்லர்
ஓங்கும் நலத்தமிழ்ச் செல்வர்
அழுத்தி நசுக்கிடுவோரை
அன்னவர் வஞ்சனை தீர
எழுச்சி பெற்றே, அறம் வாழ்த்தி
எய்திடுவார் மறம் வீழ்த்த!

இத்தகையாம் இனப்பித்தர்
ஏற்படுத்தும் பல சத்தம்
கொத்தி இலங்கை நிலத்தைக்
கூறு படுத்திடுமாயின்,
புத்த செயந்தியின் போது
புண்ணியம் என்பதிங்கேது?
நித்திரை போய்விடவில்லை
நெஞ்சுரம் கொள் தமிழ்ச் செல்வர்.

வணக்கம் புரிந்தினி மேலும்
வாய் திறவோம் என்று போலும்
பிணக்கம் வெளிப்படையாகப்
பெய்ய முனைந்துளர் 'நண்பர்'!
இணைப்பரசாட்சி உதிக்கும்
இங்கிதனால் எட்டுத் திக்கும்
மணக்க மதிப்பொடு வாழும்
வண்மைத் தமிழ் மொழி, நாளும்.

1957



படிப்பகம்

padippakam

# ஒரு முனையில் திரள்க

‘செல் திசை ஏது?
இனி நாம் செய்வது யாவது?’
எனத்
தீட்டுக திட்டம்;
உடன்
ஓட்டுக உட்பகையை
புல்லென எண்ணி
வெறும் பூசல்கள் சூழ்கிறவர்
போயொழிவார்.
நமது உட்போர்கள்
ஒழிந்து விடின்.

ஒருவர் உரைப்பதனை
உளறல் எனப்
பிற பேர்
ஒழிய மறுப்பதிலும்
‘பகிடி’ நகைப்பதிலும்
அரிய பகற் பொழுதும்
அகல் இரவுப் பொழுதும்
அழிவு தனிற்பட நாம்
அலைவது நற்செயலோ?

தலைமை பிடிப்பதிலும்
தமை உய்ய வைப்பதிலும்
சமயம் இதிற் புகுதல்
தமிழை அறுப்பதுவே!



முருகையன்

படிப்பகம்

padippakam

தொலைக வெறுப்புரைகள்
சுயநலம் அற்றொழிக.
தொழில்கள் மிகப் பெருக
விழிகள் திறப்படைக.

அறம் ஒழிவித்தவரின்
அநீதி செகுத்திடவும்
அழகு தமிழ்க்கும்
அரியணையை
அளித்திடவும்
திறமை அனைத்தினையும்
செயல்பட வைத்திடவும்
செருவில் அறப்படையின்
ஒரு முனையில் திரள்க.

முன்னை ஒருமித்து
எதிரி
முகம் அடி பட்டு விழும்
முறைமையில்,
இக்கணமே
அறிநெறியிற் பொருக –
இனிய தமிழ்க்கு உரிய
இடம் உற
எத்தடையும்
இலை
எனும்
அப்பெரிய
நிலைமை பிறப்படைய.

(செகுத்தல் - அழித்தல்)

1956



படிப்பகம்

padippakam

# வாருங்கள் சட்டம் மறுக்க

தாயின் நறுமலர்த் தாள்கள் மீது
சங்கிலி பூட்டும் நினைப்பினோர்கள்
ஆயிரம் சட்டங்கள் ஆக்கினாலும்
அன்னவர் சூழ்ச்சி பலிக்குமாமோ?
தேய வளங்கள் குறைந்து தீய்ந்து
செல்வம் மழுங்கி வருந்தினாலும்
சாய்வதுண்டோ, தமிழ் மைந்தர் மானம்?
தாழ்வதுண்டோ அவர் அன்பு வீரம்?

'அன்னையைத் தள்ளி அகற்றிவிட்டே
அன்னியம் பேணி வணங்கினீரேல்,
உன்னதமாகும் பதவி தந்தோம்
ஓடி விரைந்திடீர்', என்றிதெல்லாம்
சொன்ன மறுகணம் வந்து தம்மைச்
சூழ்வர் தமிழர், துறப்பர் மானம்
என்றும் இவர்கள் நினைத்து விட்டார்,
இங்கு பிழையை இழைத்து விட்டார்.



படிப்பகம்

padippakam

ஆளப்படுகின்ற மக்கள் தாமே
ஆள்பவர் ஆகும் நூற்றாண்டிற் கூட
வாளைக்கொடு கழுத்து ஈர்ந்து வீழ்த்தி
வாட்டி நசுக்க முனைந்து விட்டார்.
தேளை, கொடுவிடப் பூச்சி தம்மைச்
சிந்தையிலே குடி கொள்ளவிட்ட
நீளச் சிறப்புள்ள நீதியாளர்
நீசத்தனத்துக்கு
ஏன் கூசுவார்கள்?

சட்டம் இயற்றி எழுத்தில் வைத்தால்,
தன்வழியே தமிழ் சாயும் என்ற
கெட்ட நினைப்புப் பலிப்பதெங்கே?
கிட்டப் பிறர் மொழி அண்டினாலும்
எட்ட ஒதுக்கிப் புறம் விடுப்போம்
ஏன் அதை இங்கு?
விரட்டி வைப்போம்
பட்டப் பகற் கொள்ளைக் காரருக்குப்
`பாடம்`
படிப்பித்து வைக்க வேண்டும்.

மற்றவர் தங்கள் மொழியை
எங்கள்
வாய்க்குள் திணித்து விழுங்கச் செய்தல்
முற்றும் முடியும் என்று எண்ணினராம்
மூளைப்பிசகல்ல –
வாய்க்கொழுப்பு
சற்றும் இவை `அவியா`
அவர்க்குச் சாற்றி விடீர்,
குரல் ஒன்றினாலே!

வற்றிவிடவில்லை எங்கள் மானம்
வாருங்கள் சட்டம் மறுக்க இன்றே.

ஈர்ந்து - அரிந்து

1956



படிப்பகம்

padippakam

# தானை நடத்துக

ஈழ நிலந்தனில் இன்ப நறுந்தமிழ்
மீதே, தாம்
எண்ணியவாறு இடர் செய்பவர் தீவழி
போவாரேல்
ஆழ அகழ்ந்தெறி தீமைகள் – வேருடன்
ஆராத
அன்புடையாய் தமிழ் மீதினில் என்பது
பொய்யாமோ?

ஆறி இருந்திட நாள் இதுவோ, அட!
ஆகாயம்
ஆடி உடைந்திட ஓர் முரசே அறை
முன்னேறு!
வீறு மிகுந்து விரைந்திடு, செந்தமிழ்
வீரா, நீ
வீழ, மாய், சனநாயக நீதிகளே
வாழ்!

 முருகையன்

படிப்பகம்

padippakam

யாரை அடக்கிடும் என நினைப்பிது?
நாடாளும்
'ஈழ இனத்தர்' உன் மானம் அறுத்திடு
வார் போலும்!
போரை அழைத்திடு: பாடம் அவர்க்கு அது
போதிக்கும்
பூரண வெற்றியை நீ அடை இக்கண –
மே போவாய்.

சீ! தமிழர்க்கு அவமானமுறப் பொறை
பூண்பாயோ?
தேவை அறப்படை, தீவிர நற்செரு
செல்வாய் நீ
காதல் உனக்குளதே, தமிழ் மீதினில்
காய்வார்கள் –
காலில் மிதிப்பர்களாயின் எதிர்ப்புகள்
காணாது.

தாயை ஒறுத்திடுவோரை எதிர்த்திடு
தாழ்வோடத்
தானை நடத்துக: போதும் இனிப்பொறை:
தன்மானச்
சீயமெனப் பகை சாய வலத்தொடு
செல்லாயோ?
தேயமிதில், பிறழ் ஞாயம் இருப்பது
தீராயோ?

(பொறை-பொறுமை, தானை-சேனை, சீயம்-சிங்கம்,
வலம்-வலிமை)

1956



படிப்பகம்

padippakam

# நாசமாகின்றது கொடுங்கோல்

அன்னையே, தமிழே, அறிஞரின் இதய
ஆழமே, அறநெறி ததும்பும்
தொன்னைபோல் நிறைந்தும் விரிந்த
உன் நாட்டின்
தொல்புகழ் நினைக்க மெய் சிலிர்க்கும்
கன்னி, இன்றுன்னைக் கயவர்கள்
சில பேர்
கை விலங்கிட நினைத்தாராம்!
என் இனிப் பொறுமை? எவர்க்கது
வேண்டும்?
எழுகிறோம் ஒரு குலம் ஆகி.

இமாலய மலையில் எழுதிய வலிவை
'இவ்விலங்கையர்களும்' அறிய,
தமிழர் ஓர் அணியைச் சார்கிறோம்,
தாயே!



படிப்பகம்

padippakam

சரிந்துடன் ஒழிந்தன பகைகள்
சமீபகாலத்தின் சரித்திரம் நெஞ்சைத்
தகிக்கிறதாயினும் விழித்தோம்
நமது தான் வெற்றி
இதோ, ஒரு கணத்தில்
நாசமாகின்றது கொடுங்கோல்.

நெஞ்சிலே நஞ்சை நிறைத்து
வைத்திருப்பார்
நீசமே செய்கையும் நினைப்பும்
கொஞ்சமும் கூட அறப்பயம் இல்லை.
கொள்கையோ சுரண்டுதல், நசுக்கல்
அஞ்சியா ஒடுங்கிக் குறண்டுவோம்
நாங்கள்?
அறச்சமர் தொடுத்திடல் குறித்தோம்
பஞ்சிலே நெருப்புப் பட்டதன் பின்பும்
பற்றவா, படரவா பதுங்கும்?

பாவம், இவ்விலங்கைப் பச்சை நாடு
அந்தோ
பல முறை தமிழரின் பலத்தை,
சாவகம், கடாரம் சயித்த வல்லமையைச்
சலித்தது, நெடுகிலும் சுவைத்து!
தேவையே போலும் பிறகுமோர்
'டோசு'
சிறிததிற் கொடுக்க ஏன் தயக்கம்?

ஏவுவோம் எமது வலிமையை
அவர் மேல் —
இம்முறை அறவழிச் சமரால்!

பொறுப்பதா இனியும்? போதுமே!
இனிமேல்,
புலிகள் ஏன் குகையினுட் கிடக்கும்?
அறுப்பதே கடமை, அநீதியின் வேரை
அகற்றுவோம் தடைகளை
எங்கள்
பிறப்பினதுரிமை தமிழீழமே வணங்கல்

முருகையன்



படிப்பகம்

padippakam

பிறர்கள் ஏன் சருவுவார் தமிழில்?
இறுக்குவோம் வரிந்தெம் இடுப்பு
வார்களை, நாம்
இயற்றுவோம், அறவழிச் சமரை.

தூண்டிலைப் போட்டுச் சுறாப்
பிடித்திடவும்
சூழ்ச்சிகள் செய்கிறார்; அறிவோம்
தீண்டவும் நினையோம்; திமிர்வழி
மொழியைத்
திணிப்பராம் கூலியும் கொடுத்து!
வேண்டி அவ்வெச்சிற் பருக்கையை
எவர் தான்
விற்பர் ஓர் உன்னத மொழியை?
ஆண்டிடும் இனத்தார் அறிந்திலர்
போலும் —
அன்புதான் இறுதியில் வெல்லும்.

ஆகையால், எங்கள் அன்னையே,
அறிக,
அடி பணிந்து ஒதுங்கிட ஒப்போம்
வேகும் எம் நெஞ்ச விறகுகள்
இதனால்
மேல் எழும் உணர்ச்சியின் வெப்பம்
தாகமே கொண்டோம், உரிமையை
அடைய
தடுப்பதார்?
அதோ, இலங்கையினைப்
பாகமே பிரித்து ஓர் இணைப்பரசு
அமைக்கப்
பாடுபட்டு உழைக்கிறார், மைந்தர்.

1956



படிப்பகம்

padippakam

# உயர்த்துக உன்கொடி

ஒண் தமிழ் அன்னை சுதந்திரம்
ஊசல் இடும்பொழுது இன்னமும்
ஓய நினைந்தனையோ?
பிறர்
ஊறுகள் செய்து சினந்தனர்
பண்டைய உன் தமிழ் நொந்திடு
பான்மையிலே செயல் கொண்டவர்
பாதகம் என்று நினைந்திலர்
பாழ்வழி சென்று படர்ந்தனர்.

உரிமை பறித்து நசுக்கிடும்
உயர்வு மிகுத்தவர்!
நன்மைகள்
ஒழிய முயற்சிகள் செய்திடும்
உவமையில் அற்புதர் –
அன்னவர்
அரவை நிகர்த்த நினைப்புடன்
அழிவு செயற்பட எண்ணுவர்
அரி என நிற்கும் உரத்துடன்
அறவழியிற் சமர் தொட்டிடு.



படிப்பகம்

padippakam

இமயமலைச் சிகரத்தினில்
எழுதினை வெற்றி இலச்சினை
ஈழ நிலத்தில் இலட்சியம்
எய்துக வெற்றி
தமிழ்க்குலம்
நலிவு தகர்க்க உதித்தது
நமனை எதிர்க்கும் உரத்தது
நரியினை ஒத்த சிலர்க்கு – அது
நவிலரு(ம்) நச்சை நிகர்த்தது.

பழமையை மட்டும் இசைப்பது
பழுதினி இக்கணம்
ஒப்பரு
படைகள் திரட்டி அறச்செரு
முனையில் மறத்தை அறுத்திடு!

புழுதி மிசைத் தமிழ் இன்மொழி
புரள இழுத்து வலிந்தவர்
புவியில் இருப்பது நன்றட!
புகழை நிமிர்த்த விரைந்திடு.

இனவெறி பற்றி எரிந்தது
உரிமை இழப்பு நிகழ்ந்தது
இதனை நினைத்து வெகுண்டெழு –
இணையறு வெற்றி பெறும் வகை
மனமிசை உற்ற பலம் கொடு
மறலியை ஒத்து முனைந்தெழு –
மடைமை கெடப்பொரு
நல்லவர்
மகிழ உயர்த்துக உன் கொடி.

(அரி-சிங்கம், நவிலரு-சொல்லுதற்கு அரிய, மறலி, நமன்-கூற்றுவன)

1956



படிப்பகம்

padippakam

# நாம் அதற்குச் சீறுவதோ?

மதிப்புடைய நடத்தை உள்ள
மனிதர்களாம்
ஐயமென்ன?
வையகத்தின் நாடெல்லாம் வந்திருக்கும்
சபை கூட
அதைத் தெரிந்து பயனடைய
அறைந்துவிட்டார் – வெளிவெளியாய்
ஆகையினால்,
இன்னொரு சாண்
அதிகரித்த மிடுக்குடனே
உதைக்கிற நம் அயலினத்தின்
ஒதுக்கலினை ஏற்று, ஒடுங்கி
உறவினரே அவர்கள் என
உணர்ந்து
தெளிவடைந்திடுவோம்.
பதைக்கிறதா மனம்?
எதற்கு?
பதுங்கி இருந்து
எவரேனும் பதவி ஏதேனும் தந்தால்,
பற்றி, அதைப்
பாந்திடுவீர்.



படிப்பகம்

padippakam

சாந்தி, உலகில் நிலவ,
சண்டை எல்லாம் ஒழிந்துவிட,
சாத்துவிக நெறி ஒன்றே
ஏற்றதென முழங்கிடுவார்.
காந்தியொடு புத்தபிரான்
கருணை நெறி உயர்ந்தது எனக்
கழறியதைப் பிறரறிய எடுத்துரைப்பார்,
போதிப்பார்.
தாம் தலைகீழாய் நடப்பார்:
தருமத்தின் திருவுருவைச்
சழித்து, நெளித்துத் திரித்துத்
தமக்குரிமை ஆக்கிடுவார்.
வாந்தி எடுக்காதீர்கள் –
வாய் சுழித்துப் பயன் என்ன?
வையகத்தின் கோலம் இதே!
அருவருத்துக் காட்டாது.

காலடியில் நண்பர்களைக்
கருணையுடன் மிதிப்பவர்கள்
கைகளிலே திரிபிடகம் தரித்தபடி
அறம் உரைக்கும்
சீல நிலைத் திருவடிவு சிறக்க
ஒளி வீசிடுவார்.
சிரிக்காதீர் – தேவை இல்லை
அழுவதிலும் பயனில்லை
கால நெறி இது
பிழைக்கக் கருத்துண்டா?
மஞ்சல் உடை
கதி உதவும்: பிறகென்ன?
முடிசூடா அரசர்கள் நீர்.
சால்வையை விட்டெறியுங்கள்
தலை மொட்டை அடியுங்கள்
சாமி என்று தலை நிமிர்த்தித்
தயங்காது புறப்படுங்கள்.

ஏன் சினந்து புறுபுறுப்பீர்?
என்ன பயன்?
என்ன பிழை?
எல்லாரும் ஒரு குலமாய்
ஆகட்டும் என்பதுவே [illegible]



படிப்பகம்

அவர்கள் குறிக்கோளாய்க்
கொண்டுள்ளார்
சரி தானே!
தமிழர்களும் சிங்களராய் மாறிவிட்டால்,
பிணக்கு ஏது?
'தேன் தமிழ்' என்று அழுவானேன்?
சிங்களமும் தேன் தானே!
சிறிது புளிப்பு
அதில் இருந்தால்....
'சீ !' என்று தள்ளுவதோ?
நாம் தமிழர் என்றினிமேல்
நவிலாதீர்.
இவ்வார்த்தை
நாக்கு வரை வந்தாலும்
விழுங்கிவிட்டு மூச்செடுப்பீர்.

உயர்ந்தவரின் மோதிரக்கை
உதவுகிற குட்டுகளை
ஒவ்வொன்றாய்ப் பெறுவதிலே
உச்சி குளிர்ந்திடல் வேண்டும்.
பயந்து புவி அணுக்குண்டை,
ஐதரசன் குண்டுகளைப்
பார்த்து
நடு நடுங்குவதால் –
வேர்த்து நிதம் வெருளுவதால்
இயன்றவரை
இவ்வுலகப் பிணக்குகளைத்
தீர்த்து வைக்கும் இலட்சியத்துக்கு
உழைப்பவர்கள்
இடைவேளை ஓய்வுக்காய்,
நயந்து,
கடைக் கண் நோக்கு நல்கி
அருள் பாலித்து
நசுக்கிடுவார், நம்மை எனில் –
நாம் அதற்குச்
சீறுவதோ?

(ஐதரசன் - ஹைட்றஜன்)

1957

padippakam

# வெல்வது திண்ணம

அடிமை விலங்கை உடைத்தெறிய
ஆவல் ததும்பும் நின்னைப்பினராய்
இடியை நிகர்த்த குரல் எழுப்பி
இங்கு குழுமினர், செந்தமிழர்
கொடுமை ஒழிந்தது!
வெம்பகையின்
கும்மிருள் தீர்ந்ததடா!
உ[illegible]மை
விடுதலை வந்தது
அறச் செருவில்
வீழ்ந்தது தீமை என்று ஆர்த்தெழுவாய்



படிப்பகம்

padippakam

நாளை அறச்சமர் வெற்றி தரும்
நாங்கள் தலையை நிமிர்த்துகிற
வேளை பிறந்திடும் என்றுரைப்பாய் –
விண்ணதிரத் தமிழ்ப் பண்ணினிலே!
கூழை அறிவு படைத்தவரின்
கொக்கரிப்பைப் பொருள் பண்ணுவதோ?
காளைகள் தாவி எழுந்து விட்டார்
கன்னல் தமிழ் மொழி காப்பதற்கு.

வெந்த கொடியதோர் புண்ணிடையே
வேலை நுழைப்பது போல
நறும்
செந்தமிழ் நொந்திடும் வேளையிலே
'சிறீ'யின் திணிப்பைத் தொடக்கி
வைத்தார்
எந்த விதம் சகிப்பார், தமிழர்?
'ஏ' என்றெழுந்தனர் –
அவ்வளவில்
பொந்துட் பதுங்கிய பாம்பெனவே
போயிற்று அரசினர் சட்ட நெறி.

பாய நினைத்த புலி
சமயம்
பார்த்துப் பொறுத்துப் பதுங்குவதை
ஓயல் என்றெண்ணி உறங்குகிறார் –
உண்மை உணர்ந்திலர் –
ஆள்கிறவர்.
தீயிடை வெந்து நெளிந்திடும் ஓர்
சின்னப் புழுவெனச் செந்தமிழர்
காய்கிற போதில் அவர் தமது
கண்களை மூடுதல் சாத்தியமோ?

கத்தி, இரத்தம் எதுவுமின்றி,
கையிடை வாள், கணை, ஈட்டி இன்றி,
சித்தமிசைச் சினம் ஏதுமின்றி,
சிங்களர் மீதிற் குரோதமின்றி
எத்திசையும் வியப்பெய்த



படிப்பகம்

padippakam

இங்கே —
ஈழத்திலே அறப்போரிடுவோம்,
ஒத்த மனத்தினராய்த்
தமிழர்
ஒன்று கலந்து இக்கணத்தினிலே,
உள்ளத்திலே சுரந்தூறும் அன்பே
ஒப்பற்ற தங்கள் படைகள் என,
வள்ளுவன் வான்மறை சொன்ன
அற —
வாசகம் தங்கள் கவசமென,
பிள்ளை மனப்பெருங் காந்தியரின்
பேச்சுகள் தங்கள் மறைகள் என,
கொள்ளும் மனத்திறம் கொண்ட
குணக் —
குன்றுகள் வெல்வது திண்ணமடா!

ஆவியை ஒத்தவள், அன்னை தமிழ்
அன்னியர் பூட்டிய வெர்தளையை,
பாவிகள் தாழ்ந்து தலை குனியப்
பட்டென வெட்டித் தொலைக்கு மட்டும்
ஓய்வறியார்:
உழைப்பர் தமிழர்:
ஒற்றுமை ஓங்கி உரிமை தரும்
தீதில் இணைப்பரசாட்சி கண்டே
சிங்கத் தமிழர்கள் ஓய்வர் அடா!

தீதில்-தீமை இல்லாத, ஆர்த்து-ஆரவாரித்து.
இணைப்பரசு-சமஷ்டி ஆட்சி

1957



படிப்பகம்

padippakam

# விடிபொழுது தொலைவில் இல்லை

பல்லாண்டு பாடுகிறோம் – தமிழ் அன்னைக்கு
பாண்டியரே, சோழர்களே, சேரர் மாரே,
எல்லாரும் வாருங்கள் –
இந்த நாட்டின்
இளமை பயில தமிழ்த்திரளே, வருக.
எங்கள்
வல்லாண்மை மிகுந்த தமிழ்ச் சொந்தத்
தாயை
வருத்த நினைக்கின்றவனும் இருக்கின்றானே!
பொல்லாங்கு வேரோடு பொசுக்கிச்
சாய்க்கப்
புறப்படுங்கள், தோழர்களே
தயக்கம் வேண்டாம்.

சங்கத்துத் தமிழ்,
பகையைக் கண்டு சீறித்
தகர்த்தெறிந்து புறங்காணும் தமிழ்,
அன்றைக்கு
வெங்குருதி தனிற் கமழ்ந்து புலவு நாறும்
வேல் வேந்தர் வளர்த்த தமிழ்,
கடல் கடந்து
எங்கும் ஒளி சிறந்து விறல் நாட்டி வாழ்ந்த
எங்கள் தமிழ் –
மதிப்பிழந்து, மாண்பு கெட்டு,
இச் –
சிங்களத்தர் நிலத்தினிலே பணிவு காட்டிச்
சிரம் தாழ்த்த வேண்டும் என்றும்
சிலர் சொல்கின்றார்!



படிப்பகம்

முடியாது –
வணங்காத,
நெடும் பொன் பூண்ட
முடிமீது புகழ் இருத்தி
வாழ்ந்த நாங்கள்
அடி நாடி 'அரிச்சனைகள்' செய்து
அன்னார் தம்
'அருட்பெருக்கால்' விட்டெறியும்
பருக்கை ஏற்று
கெடும் மானம் துறந்து
பிறர் நிழலில் வாழ –
கிழிந்துவிட்ட கந்தல் அல்ல –
தமிழர் பண்பு.
விடு பாணம் –
அகிம்சை எனும் வீரப்பாணம் –
வெற்றி பிறந்திடத் தொடுப்பீர் –
அன்புப் பாணம்!

தென்னாட்டில் மட்டுமல்ல,
ஈழம் என்னும்
சிங்களத்தர் நாட்டில் அல்ல,
எந்த ஊரில்
எந்நாட்டில் எவனொருவன் தமிழைப் பேச
இருக்கின்றான் –
அங்கெல்லாம் உரிமை காணும்
நன்னாட்கள் விடிபொழுது
தொலைவில் இல்லை
நசுக்க நினைப்புடையவனின்
கயமை சாய்த்து,
சின்னாபின்னப்படுத்திச் சிதைத்துத்
தூளாய்ச்
சிதறடிக்கும் பெருவேட்கை பிறந்த பின்னால்!

ஏதேது பரிதாபம்!
இங்கெம் நண்பர்
எம் பலத்தை தவறாகக் கணித்துக்
கொண்டார்
தீதான கொலை, கொடுவாள், இரத்தம்,

padippakam

குண்டு,
சிறுசெயல்கள் அறியார்கள், தமிழர்
ஆயின்,
கோதேதும் இல்லாத செந்நாப்போதார்
கூறி வைத்த இன்னா செய்யாமைக்
கொள்கை
போதாதென்று
அவர் எண்ணிக் கொண்டார் போலும் –
புறங்கண்டு
பகைமையினைத் துரத்தித் தீர்க்க!

வெறுப்பிடையே விளைவதல்ல,
பிளவில்,
வெய்ய
வேற்றுமையில் விளைவதல்ல,
நெஞ்சில் உற்ற
கறுப்பு நிறத்திடை முளைத்து வளர்வதல்ல,
காழ்ப்பிடையே –
பொறாமையிடை விளைவதல்ல,
அறத்திடையே விளைவது –
எங்கள் அன்பு வீரம் –
ஆன்ம வலு – உயிராற்றல் – அதனால்,
இங்கே
பிறப்பது தான்
அறப்போரின் பெரிய வெற்றி
பிசகாத திறல் வெற்றி –
தமிழின் வெற்றி.

(கோது-குற்றம், செந்நாப்போதார்-வள்ளுவர், இன்னா செய்யாமை-அகிம்சை, ஆன்மவலு-ஆத்மசக்தி)

1957



படிப்பகம்

padippakam

# வெற்றிக்கு விழா

கண்டேன் உனது கடிதம்
தமிழ் வெல்லும்
உண்டானதேனோ உனக்கு அய்யம்?
நண்பா,
அறத்தின் வழிச் சென்று
அருட் சமரம் ஆற்ற,
குறித்தெழுந்தது எங்கள் குலம்.

'எங்கே சமர் முரசம்?
ஏடா, தமிழா, உன்
பங்கை நிலைநாட்டு, என்று
இங்கெழுந்து
பொங்கும்
அழைப்பொலியைக் கேள், நீ
அழகு தமிழ் வென்று
தழைக்கும் –
தகரும் தளை.



படிப்பகம்

கண் இருந்தும் பாரார்
கருத்திருந்தும் சிந்தியார்
எண்ணுகிறார் – எம் அறப்போர்
ஏதோ என்று
அண்ணல், அருட்
காந்தி வழி செல்வதற்குக்
காலெடுத்து வைத்துவிட்டோம்
வேந்தர்களே நாங்கள் இனிமேல் –

சொல்லால் மிரட்டிச்
சுகமாய்ச் சமாளிக்க,
புல்லோ தமிழர்களின் புத்தி வலு?
எல்லாளன்
சந்ததியோர் இன்று
'தகர்ப்போம் பகை' என்றார்.
வந்தது போர் –
அன்பின் வழி

உண்மை நெறியின்
ஒரு சிறிதும் நீங்காத
திண்மையுடனே செழுந்தமிழர்
கண் இமைக்கும்
போதிற்குள்
இன்னே புறப்பட்டு விட்டார்கள்,
நீதிக்குரிய நெறி.

ஆயுதங்கள் இன்றி,
அறமே துணையாக்கித்
தீயவரின் நெஞ்சம் திருத்துவதே
தூய அருட்
சீர் நிறைந்த, தன்மம் திறம்பாத
எங்களவர்
போர்முறையாம் என்று
புகல்.

ஒன்றும் புதிதல்ல –
ஈராயிரம் ஆண்டின்

முன்பே தமிழன் மொழிந்த வழி
அன்பினால்
யாவரையுமே வெல்லுகிற
இன்னா செய்யாத வழி
தீர உணர்ந்தோர் செயல்.

இன்னா செய்தாரை ஒறுத்தல்
அவர் நாண
நன்னயம் செய்து விடல் என்று
முன் மொழிந்த
வள்ளுவனே எங்கள் வழிகாட்டி
– நம்மவரின்
உள்ளமிசை ஊர்ந்த ஒளி.

`போங்கள் அத்தான், போருக்கு
– போய் வாரீர்`
என்றுனக்குத்
தேன் குழைத்த சொல்லாலா
செப்பினாள்?
மீன்களுக்கும்
தோல்வியினைக் காட்டித்
துலங்க விழிப்பவள், உன்
சால்பினுக்கு ஏற்ற சகி.

வேறென்ன?
இன்னும் விரிவாய் மறு கடிதம்
ஆறுதலாய்ப் பின்னர் அனுப்புகிறேன்.
தேறு மனம்
நாளைக்கு வெற்றி நமதானால்,
வெற்றிக்கு
வேளைக்கு வேளை விழா.

1957



படிப்பகம்

padippakam

# விடிவு

மை இருள் கிழித்து இன்ப சுதந்திரம்
மலருகின்றது
அம்மாண்புறு செய்தியைச்
செய்ய சேவல் ஒலிப்பது கேளடா!
சில்லறைப் பழி தீர,
சுதந்திர
வெய்யவன் கிழக்கில் நிமிர்கின்றனன்
வீறு கொண்ட தமிழர்கள்
அன்பினால்
செய்த போரின் பயன் பெறும்
சூசகம்
தெரிதல் கண்டு
மகிழ்ந்தனர், நம்மவர்.



படிப்பகம்

padippakam

நீதி கொன்றவர் ஆக்கிய சட்டங்கள்
நீறு செய்து அவை மீறினும்
அன்பெனும்
தீதிலா வழி இம்மியும் தாண்டிடாச்
செம்மை சேர்ந்தவர் நம்மவர்
என்பதால்,
காதிலே, அதோ, வெற்றியின் பல்குரல்
கணீர் என்றே படும்
அன்னை விலங்குகள் சேதிபட்டுச்
சிதறி விழுந்தன
சிங்க ஆசனத்தே தமிழ் உற்றது.

பாடுமின்கள் சுதந்திர வெற்றியை
பாவை மார்கள் பலரும்
நடனங்கள்
ஆடுமின்கள்!
அருங்கவி வாணர்கள்
அன்பு வென்றதைப் போற்றிப்
புகழ்ந்திடக்
கூடுமின்கள்,
குதூகலம் கொள்ளுமின்
கொடுமையாளரின் கொல்விடக்
கொள்கைகள்
சாடி வீழ்த்திய தண் — தமிழ்
வீரமே
தலைமையானதென்று ஏத்துமின்,
வாழ்த்துமின்.

நிலம் பிடிப்பதும்
நெற்றியின் நேரிலே
நீதியைக் கொலை செய்வதும்
மற்றவர்
நலம் கெடுப்பதும்
உரிமை பறிப்பதும்
நாணம் இன்றித் தமிழை ஒதுக்கலும்
குலம் கெடுத்திடும் சூழ்ச்சிகள்



படிப்பகம்

padippakam

செய்வதும்
குடை புரண்டு கவிழ்ந்து விழுந்தன
சிலம்படிக்கு
வணக்கம் செலுத்துவீர்
'செந்தமிழ் மகள் வாழ்க' என்று
ஆர்த்திடீர்.

சிதைந்தொழிந்தன நம் பகை
பற்றிய
சிறுமை யாவும்
பொடிப்பொடி ஆயின
அதிர்ந்து வான் முகடு ஆர்க்க
முழங்கிடும்
அன்பு வெற்றி முரசம்
கயமைகள்
உதிர்ந்து வீழ்ந்தன
பொய்ம்மை சுருண்டு மாய்ந்து
ஒழிய
உண்மையே வென்றதிங்கு
என்பதால்,
சுதந்திரத்தின் விடிவினைப்
பார்த்திடீர்
சுகம் பிறக்கும் வடிவினை
நோக்குவீர்.

(செய்ய-சிவந்த, சேதிபட்டு-வெட்டுப்பட்டு, கொல்விடம்-கொல்லும் குணமுள்ள நஞ்சு)

1957



படிப்பகம்

padippakam

# வாரும் எங்களுக்குள்ளே ஓர் மற்புரிந்து மாளுவோம்.

(தமிழன் என்றொரு இனம் உண்டு
தனியே அவர்க்கொரு குணம் உண்டு
— நாமக்கல் கவிஞர்)

ஒன்றுபட்டு வாழல் விட்டு
உருக்குலைந்து எமக்குள்ளே
கொன்று கெட்டு வீழலே
குறித்துளோம்.
இதல்லவோ
நன்று!
மற்றவர்கள் செய்யும் நாசவேலை
நல்லவை
என்று விட்டு
நாம் இரைகள் ஆவதே சிறந்ததாம்.

இடது கன்னம் மீதில்
அன்று யேசு சொன்ன மாதிரி
அடி தர,
பெருத்த இன்ப ஆழியின் முழுக்கினை
நெடிது துய்த்து
எம் வலது கன்னம்
நீட்டுகின்ற கைகளின்
அடி பெறத் தரும் சிறப்பில்
'ஆன்ம சக்தி' உண்டடா!

தீமை செய்து
துன்புறுத்துகின்றவர் செயல்களுக்கு,
'ஆம்' எனச் சிரங்கள் தம்மை
ஆட்டுதல் உயர்ந்ததே!
நாம் எதிர்த்தல் விட்டு
அவர்க்கு நன்மைகள் புரிந்திடல்
சேம வாழ்வு வாழவும்



படிப்பகம்

சிறந்த பாதை அல்லவோ?

ஆகையால்,
எம் அன்புடைத் தமிழ்ச் சகோதரா,
அறி –
வேதும் இன்னல் வாதையூடு
வேதனைப்படும் பொழுது,
'ஆகுமோ, அடுக்குமோ?' எனக்,
கனன்று எழுந்திடேல்.
சாகவே வரின்
அதைத்
தடுக்க யாவர் வல்லவர்?

துச்சமாக எண்ணியே, துரும்பு
எனும்படிக்கு
எமை
வைச்செவர் நசுக்கினும்
வருத்தியே பொசுக்கினும்
நச்செனும்படிக்கு
எமக்குளே பகைத்திருப்பதை
இச்சகத்திலே ஒழிக்க
என்றுமே ஒருப்படோம்.

மானம் இற்று ஒழிந்து போய்
மடிந்து கெட்டுத் தீரினும்
ஈனம் மிக்கு
இழிந்து
உயிர் சுமந்திருப்பதாயினும்
– ஏன்? –
நமக்குளே
வளர்ந்திருப்பதான பேதமே
மேன்மை மிக்கவாம்:
அவற்றை
விட்டொழிக்க ஒத்திடோம்.

மொழி இழந்து, கதி இழந்து
முதிருகின்ற பண்பெனும்
விழி இழந்து
விறல் இழந்து
விதிகடந்த வாழ்வுடன்

padippakam

இழிவின் ஒன்றி
ஈழமீது இருப்பதே சிறப்பென,
குழியிலே விழுந்த பின்பு
கூறி உள்ளம் தேறலாம்.

கெட்டு வீழும் எம்மினம்
கிழிந்து பிய்ந்து
பீத்தலாய் விட்ட பின்னும்
எம்முள் மொய்த்த
வேற்றுமைகள் விட்டிடோம்
மட்டிலாத எங்கள் பண்பு
மற்புரிந்து இறந்திடல்
எட்டி, எம்மை நாங்களே,
எதிர்த்து
மாய்ந்து சாய்குவோம்.

வீரம் மிக்கவர்கள் நாம்
மிகுந்த மானம் உள்ளவர்
தீரம் உற்றவர் –
செருச்
சிறந்த எங்கள் ஆடலாம்.
காரம் மிக்க சொல் எறிந்து,
கல்லை ஒத்த திண்மையீர்,
வாரும் –
எங்களுக்குள்ளே ஓர்
மற்புரிந்து மாளுவோம்.

நாங்களே நமைப் பகைத்து
நாசமாதல் அல்லவோ
ஓங்கும் எங்கள் நல்லினத்தின்
உத்தமத் தனிக்குணம்!
'வாங்கள்' அத்தனிக் குணம்
வளர்ப்பதே கடன்.
இதால்,
தீங்கிலாத சிங்களத்தின்
சேவையாளர் ஆகலாம்.

(இன்ப ஆழி-இன்பக்கடல், துய்த்து-அனுபவித்து, இழிவின் ஒன்றி-இழிவடைந்து, செரு-போர)

1957





படிப்பகம்

padippakam

# பண்ணுங்கோ தமிங்களத்தை

தம்பி இங்கு நீ வாடா,
தமிழ் மோனே!
உறங்காதே, உறங்கிப்போனால்,
நம்பி உன்னை வாழுகிற
தமிழினது கதி என்ன?
நமது பின்னோர்
கும்பிடுவர் உனைப் போற்றி
என்னுடைய சொற்கள் செவி
கொள்ளு, குஞ்சு!
அன்புடையாய், நான் சொல்லும்
அவைகளை நீ கேட்டுக்கொள்
அவ்வாறே செய்.

சமக்கிறுதத்தோடு தமிழ் தனைக்
குழைத்துப் பிட்டவித்துப்
பண்டை நாளில்
தமிழ்க்கிருதம் சரிக்கட்டிப் பரிமாறி
அனுபவித்தோம் – அதனால் அன்று
நமக்கிருந்த `டிமாண்ட்`டென்ன,
மவுசென்ன, நடப்பென்ன,
நவிலலாமோ?
சமைத்துவிட்டோம் பல மொழிகள்
மலையாளம், தெலுங்கென்று
தமிழின் வேறாய்.

பின்னாளில் இங்கிலிசை அள்ளிவந்து
தமிழோடு கலந்து கொட்டிப்
பொன்னான தமிங்கிலிசைப்
படைத்து விட்டோம் –
புதிய பிரமாக்கள் நாங்கள்



படிப்பகம்

padippakam

என்னே, தம்பி, எங்கள்
கெட்டிக்காரத் தனத்தை
இனியென்றாலும்
உன்னாலே புரிந்து கொள்ள
முடிகிறதா?
அவ்வளவும் போதும், மோனை.

வடக்கே செந்தமிழ் வழங்கும்
தென்னகத்தோர்
இந்தி கடன் வாங்கி வந்து
படைக்கின்றார் தமிழ்ந்தி எனும்
புதிய மொழி, பாரதத்தில்
பதைக்காதே நீ.
இடக்காக இல்லாமல் இனிப்பாக
இருக்கிறதாம் இந்திப் பேச்சு
கொடுப்பின் உள்ளே தமிழ் ஒதுக்கி
உதட்டினிலே இந்தியைத்தான்
கொள்ளல் நன்று.

இங்கெமது பொன்னான ஈழமணித்
திருநாட்டில் என்ன சேவை
உங்களுக்காய் உள்ளதென
அறிந்து கொள்ளு, தமிழ் மோனை
உசாராய் நில்லு
சிங்களத்தைத் தமிழோடு பிணைந்து
கொட்டிப் பிசைந்தவித்துப்
புதிசாய் நாங்கள்
தங்கமயமான மொழி
தமிங்களத்தைப்
பிறப்பிக்க வேணும் தம்பி.

பிறப்பித்து விட்டோமோ – பிறகென்ன
இலங்கையிலே பிளவு, மோனை?
[illegible]றப்புறென முழிசாதே
சிங்களவர் தமிழரொடு சண்டை
[illegible]
[illegible]டலே உறுமிவிட்[illegible] ஒப்பந்தம்
[illegible]



படிப்பகம்

padippakam

வெறுப்பொழியும்
தமிங்களவர், ஓரினமாய், ஒற்றுமையாய்
உறைந்து வாழ்வார்.

இருபதாம் நூற்றாண்டிற் சிங்களமே
அரசு மொழி – இதனைப் போலே
பெருமையொடு, தமிழ், முன்னை
அரசாண்ட பழைய மொழி
பிசைந்தொன்றாக்க
வருகின்ற தமிங்களத்தின் மகிமையினை
வகுத்துரைக்க வார்த்தை ஏது?
இரவு பகல் பாராமல்
பண்ணுங்கோ தமிங்களத்தை
ஈழம் வாழும்.

மோனே, மோனை என்பன 'மகனே' என்பதன் சிதைவென்க. டிமாண்டு - திசைச் சொல், மதிப்பு என்னும் பொருளில் தமிழரிடை வழங்கி வருவது. முழிசாதே என்பது விழிக்காதே என்பதன் வாய்மொழி வழக்கு வடிவமென அறிக. பண்ணுங்கோ என்பதும் அது போல்வதே என்க!

1957



படிப்பகம்

padippakam

# நண்டு விடு தூது

நண்டுகளே, வாருங்கள்
நாங்கள் உமையெல்லாம்
கண்டு கதைப்பதற்குக் காரியங்கள்
எத்தனையோ
உண்டு
சிறிதுங்கே 'உப்பிடியே' நில்லுங்கள்
சண்டை பிடித்துச் சரிக்கட்டித்
தீர்த்துவிட
நாம் எண்ணவில்லை. எங்கள் நண்பர்களே!

ஆகையினால்,
போம் எண்ணம் வேண்டாம்
புறப்படலாம் ஆறுதலாய்
வேறை ஒண்டும் இல்லை
விசயம் இவ்வளவுதான் –
கூறுகிறேன் கேளுங்கள் –
கோலங்கள் வெண்மணலில்
தாராளமாகச் சமையுங்கள்
சட்டியிலே
நீராழமானால் நெகிழ்ந்து சமைபடுங்கள்
எட்டிப் பிடிக்கும் இளையதம்பி
கை விரலை
ஒட்ட நறுக்கி உதிரம் குடியுங்கள்
பெண்சாதியோடு பெரிய கடல் நீருள்
கண்சாடை காட்டிக் கதையுங்கள்
கை கோத்து
நாலு வளையம் நடந்து திரியுங்கள்
காலுளையு மட்டும் கரணம்
அடியுங்கள்



முருகையன்

படிப்பகம்

padippakam

வேண்டாம் என நாம் விளம்பவில்லை,
நண்டுகளே!

ஆண்டார்கள் கட்சியிலே ஆட்பலமாய்,
பக்கத்தில்
நின்று துணை புரிந்து நீதிகொலை
பண்ணுவது
நன்றல்ல – என்றே நவிலுகிறோம்
உம்மினத்தார்
'இப்போசா' வண்டிகளின் எண் தகடு
தோறும் உள்ளார்
அப்பாவம் வேண்டாம்
அபாது
உடனே நிற்பாட்டி
நல்லபடியாய் நடவுங்கள்
அல்லதூஉம்
சொல்ல முடியாத துயரம் படுவீர்கள்
சண்டித்தனமா, சனியன்காள்?
உங்களை நாம்
கிண்டிக் கிடங்குட் கிடத்தி
மணல் போட்டு
மேலுலகம் காட்ட விருப்பந்தான்
என்றாலும்
காலமெல்லாம் சோராது
கட்டி வளர்த்து வந்த
பண்பாடு எம் கையின் படபடப்பைக்
கட்டுகிது
வெண்பாலைப் போன்ற 'பெயின்ற்றால்'
உமக்கெல்லாம்
பூச்சுக் கொடுத்துப் புதுத்தகடு
போடுவதில்
ஓய்ச்சல் ஒழிவின்றி ஊக்கத்தொடு
முனையும்
தம்பிகளைக் கண்டு தலை நடுங்கும்
நண்டுகளே,
வம்பு தும்பேன்?
உங்கள் வழியே நீர் செல்லுங்கள்
வீண் கரைச்சல் வேண்டாம்



படிப்பகம்

padippakam

விரைந்து சென்று, நும் குலத்தை
வேண்டுமென்றே இந்த வசுக்களிலே
ஏற்றி வைத்த
அந்த இனத்தின் அமைச்சர்
முதல்வருக்கும்
இந்தக் கதையை எடுத்துரைப்பீர்
எண் தகட்டில்
யாழ்ப்பாணம் வந்த இனிய
அனுபவமும்
`ஈப்போசா` வண்டியிலே ஏறி
இருந்தமையும்
வெள்ளைப் `பெயின்ற்` உமது
மேனியினை மூடியதும்
எள்ளத்தனையும் எவரும் எதிர்க்காத
பான்மையையும் எல்லாம்
பகிடியல்ல, நண்டுகளே.
மேன்மையுள்ள
அந்த மிது மூளை கொண்டோர்க்கும்
சொல்லி விடுங்கள்
சுடுகாட்டில் நும்மினத்தார்
`தாண்டுக்கிடாம்` கொட்டத்
தகனப்பட நேர்ந்த
மாண்பினையும் எல்லாம் மறக்காது
சொல்லுங்கள்.
இத்தனையும் சொல்லிவிட்டால் எங்களுக்குப்
போதியது
மெத்தப் பெரிய உதவி எனச்சொல்லி,
சீரிறு பெரியீர் எனவும் `புளுகி`
மனம் பூரிப்போம்
இப்பொழுதே போம்.

**1957**



படிப்பகம்

# வெட்கம் கொள்ளுக

கல் எறிவதும் காய் சினம்
கொண்டு
களவு செய்தலும்
ஒன்றறியாரைத்
தொல்லை செய்தலும்
தம் விபரீதச்
சுயநலச் சிறு புன்மதியாலே
அல்ல செய்தலும்
'அவ்வினத்தார்க்கே'
அமைந்த கொள்கை என்று
எண்ணி இருந்தோம்.
இல்லையே, தமிழ்ச் சோதர,
சீச்சீ, என்ன செய்தனை?
ஏற்குமோ இஃதும்?

வெட்கம் கொள்ளுக,
வேதனை கொள்க
மீறல் செய்து அறம்
ஈறு செய்வோர்
எம்
மக்கள் உள்ளும் வதிவதை
– எண்ணி
மந்திரிகளை வைத்து, மன்னாரில்
கற்கள் வீசிய நம் சில
பேரின்
காடைப் போக்கை நினைந்து
வருந்து
தக்கவர் செயல் என்ற
வரம்பைத்
தாண்டியோ, அறப்போர்
செய எண்ணம்?

அகிம்சையின் வழி போர்செய
எண்ணி
ஆயத்தங்கள் புரிகிற மக்கள்
சகம் சிரிக்கத் தடிகளும்
கல்லும்

padippakam

தாங்க எண்ணுதல் தற்கொலை
அன்றோ!
அகம் சிலிர்த்திட, அன்புடை
யோராய்
ஆக வேண்டிய நம்மவர் யாரும்
வெகுண்டு கற்களை மற்றவர் மீது
வீச எண்ணுதல் நாசம்
அழைக்கும்.

கொள்கைத் தூய்மையை,
தீமையைக் கண்டு
கூசும் பான்மையை –
தேசு மிகுந்த
உள்ளத் தூய்மையை,
உண்மையின் மீதில்
உற்ற பற்றினை மற்றவர்
கண்டுகொள்ளுமாறு
நடந்திடல் இன்றி –
கொடுமை செய்ய நினைத்திடல்
– அந்தோ!
அள்ளி நம் தலை மீது
நெருப்பை
அடுக்கி வைப்பதை ஒப்பது,
தம்பி!

வள்ளுவன் வழி வந்த நம்
மக்கள்
வாய்மை நன்னெறி போகிற
மக்கள்
தெள்ளு செந்தமிழே
உயிர் என்று
செகம் நடுங்க முழங்கிடும்
மக்கள்,
பள்ளம் தேடி விழுந்திடலாமோ?
பகைவர் எள்ளிச் சிரிக்க
மாட்டாரோ?
கிள்ளி நீ எறி, நெஞ்சில்
இருந்து
கீழ்மை நோக்கிய செய்கைகள்
எல்லாம்.

1957




படிப்பகம்

padippakam

# யாத்திரை பல வகை

யாதத்திரைகள் பல வகை
இங்கு நாம்
இயன்ற வாறு சிலசில மாதிரி
சேர்த்தெடுத்து வகுத்து
உரை செய்யவே
சித்தம் கொண்டு கவிதை
தொடங்கினோம்
போர்த்தொழில் வலு கொண்டவர்
பண்டை நாள்
புகழும் மேன்மையும் எய்தினர்
இன்றெனில்,
யாத்திரைத் தொழில் வல்லவர்
அல்லரோ
ஏகபோக உயர்வினை எய்தினார்?

முன்பு காழியூர்த் தெய்வக்
குழந்தையும்
முதிர்ந்த தோழமைச் சுந்தர
மூர்த்தியும்
அன்பு பேருரு ஆகிய அப்பரும்
ஆருயிர் நெக்குருகி
அகம் குழைந்து
இன்ப வாசகத் தேன் தமிழ்
நல்கிய
ஈடில்லாத அவ்வாதவூர்
அய்யரும்
நம்பி, நாள் தோறும், நஞ்சணி
கண்டனை
நடந்து கோயில் பணிந்தது
யாத்திரை.



படிப்பகம்

இன்னா இன்மை எனும் வழி
சென்றதால்
இந்தியாவை விடுதலை பண்ணியே
ஒன்னலர்க்கும் கருணை
புரிந்திடும்
உயர்ந்த கொள்கையர்
உத்தமர் காந்தியார்
நன்மை காண அறவழிப்
போரிலே
நடை பயின்று நவகளி
எய்தலும்
அன்னியர்க்குச் சவால் விடத்
தண்டியில்
அணி வகுத்து நடந்ததும்
யாத்திரை.

செய்த பாதகக் குப்பையைக்
கூட்டியே
சேர்த்து மூட்டையாய்க் கட்டி
எடுத்ததை
வைகை ஆற்றில், வடதிசைக்
கங்கையில்
மற்றும் உள்ள நதிகளின்
மத்தியில்
பெய்து விட்டு முழுகித் திரும்பிடும்
பெருமை மிக்க புனித வழியிலே
உய்தி எய்த முயன்றிடும்
யாத்திரை
உவமை வென்றதோர் உன்னத
யாத்திரை.

`துரைகள்` தங்களின் சொந்த
மகிழ்வுக்காய்ச்
சுழன்று இம்மாநிலம் சுற்றுதல்
யாத்திரை
சருவதேச பாராளுமன்றங்களின்
தரிசனம் பொருள்
இன்னொரு யாத்திரை

padippakam

தரும வாழ்வு புதுக்கிடும்
ஞானிகள்
சகம் முழுக்கப் பறந்திடல்
யாத்திரை
இரைகள் தேடியே 'எங்கடை'
பூனையார்
எலியை நாடிப் பதுங்கல்
தீன் யாத்திரை.

முதிரும் அன்பொடு காவடி
கட்டியே
முருக நாம பசனை தொடர்ந்திட,
கதிரை மாமலை செல்வதோர்
யாத்திரை
காசி யாத்திரை, கயிலைக்கு
யாத்திரை
திரு மிகுந்த சிதம்பர யாத்திரை
தீர்த்த யாத்திரை
திருமலை யாத்திரை
பெருமை மிக்கன யாத்திரை
பல்வகை
பின்னும் ஓர் சில மாதிரி
கூறுவாம்.

தொண்டர் சேனை தொடங்கிடும்
யாத்திரை,
'தொந்தரவ்வு' கொடுப்பதே
நோக்கமாய்க்
கொண்டு செய்யும் குழப்படி
யாத்திரை,
குறை தவிர்ந்த குதூகல
யாத்திரை
கண்டி யாத்திரை கால்நடை யாத்திரை
கலக எண்ணக் கலப்பற்ற யாத்திரை
சண்டியர்க்கும் தரும பிரான்கட்கும்
சர்வரோக அரசியல் மாத்திரை.

1957



படிப்பகம்

padippakam

# 2

# நீரும் நெருப்பும்

## 1984 ~ 1998



படிப்பகம்

padippakam

# நீரும் நெருப்பும்

திருப்பி நாம் பார்க்கும் போது...
சென்று போய் மறைந்த ஆண்டு –
நெருப்புகள் நீர்களாக
நிகழ்ந்ததை மறக்கப் போமோ?

எரிந்ததும். கருகி நைந்தே
இடிந்ததும், தூள் தூளாகி
நொருங்கிய கதையுமாக
நொடி பல அசைந்து செல்ல
விரிந்தது. காலம்
அந்த
விரிகையாய் வளர்ந்த ஆண்டு
பிரிந்து போய் விடட்டும் என்று
பிரார்த்தனை செய்கின்றோம், நாம்.

வெள்ளங்கள் நாலு கண்டோம்
விளையுளின் அழிவு கண்டோம்
பள்ளங்கள் நிறைந்த பாதைப்
பரப்புகள் மிகுந்ததாலே
தள்ளுண்டும் இழுவையுண்டும்
தடக்குண்டும் வாகனங்கள்
உள்ளன்பே சிறிதும் இன்றி
உலுக்கிட, உடம்பு நொந்தோம்.

நீர்கள், நெருப்புகள் நீங்கி
மக்கள் வாழ்
ஊர்கள் ஊர்களாய் வருமா?
போர்கள் குறையுமா, புதிய
ஆண்டிலே?

1984



படிப்பகம்

padippakam

# சிதறிய சீவியங்கள்

கொட்டுண்டு கருகி விழுந்த
கொழுந்துகளே, இளந்தளிர்களே
மொட்டாகி மலர்ந்து குலுங்கிய
மோகனங்களே, வாலிபங்களே
சட்டென்று வீசிய சூறையில்
சாய்ந்து கிடக்கும் பழக்குலைகளே
வெட்டுண்டு துண்டுகளாகி
விழுந்து சிதறிய சீவியங்களே,

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்.

 முருகையன்

படிப்பகம்

padippakam

பலியாகி மறைந்து போயினீர்
பாழாகி முடிந்து போயினீர்
பலியாக்கி உயிர்கள் தந்ததால்
பலிபீடம் சிவந்து போனதே
பலிபீடம் சிவந்து போனதால்
பலகாலும் நனைந்து போனதே
பலியாகி மறைந்த உங்களின்
நினைவாலே மனது சோர்கிறோம்.

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்.

ஊழித் தாண்டவம்
முடிந்து போயினும்
உயிர்ப்பு மீளவும்
நிகழ வேண்டுமே!
வாழ்வுக் கூத்தை நாம்
ஆட வாழ்கிறோம்
வலிமை நோக்கி நாம்
பயணம் ஆகிறோம்
உயிர்ப்பு மீளவும்
நிகழ வேண்டுமே
உணர்வும் ஆவியும்
இழைய வேண்டுமே
அயர்ச்சி சோர்வுகள்
அகல வேண்டுமே
அமைதி வாழ்நிலை
மலர வேண்டுமே

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்.

**1994**



படிப்பகம்

padippakam

# எங்கள் முற்றம்

நாங்கள் யார்?
நாம் பெற்ற பண்பாடென்ன?
நலமென்ன, தீங்கென்ன?
ஞாயம் என்ன?
வேங்கைகள் ஏன் தலையெடுத்து
வேகம் கொண்டார்?
வேற்றவர்கள் நமை அடக்க
மீண்டும் மீண்டும்
சூழ்ந்தெழும்பிச் சுடுவதென்ன?
வெட்டிக் கொத்தித் துளைப்பதென்ன?
பிணமாக்கி நாற வைத்துப்
பாழ்ங்கிணற்றில் தள்ளிவிடப் பார்ப்பதென்ன?
பட முடியாத் துயரம் நாம் படுவதென்ன?

சாம்பல் மேடாகி
எங்கள் முற்றம் எல்லாம்
தம்பாட்டில் மயானமாய் வெயிலிற் காய்ந்து
தேம்புவதேன்?
எம்மவரின் அடையாளத்தைச்
சிதைப்பதற்கு நடந்தேறும் முயற்சி வென்றால்
வாழ்ந்தென்ன, வீழ்ந்தென்ன?
மானுடத்தின்
மாண்புகளை வாய் கிழியப் பேசி என்ன?
ஆழ்ந்திவற்றைக் கவனமாய் நோக்க வேண்டும்
அதற்குரிய நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

1988



படிப்பகம்

padippakam

# பாற்கடல்

தீர்க்கமாய் அமுதம் தான்
வேண்டும் என்று
சிந்தித்து நின்ற நாங்கள்
வேர்க்கடலை கொறித்தபடி
வீண் பொழுது போக்குவதோ?
வேண்டாம், வேண்டாம்
பாற்கடலைக் கடைவோமே
பரபரப்பை விடுவோமே!
பதைப்பு வேண்டாம்
வேர்த்திளைத்து விழு மட்டும்
வடம் பிடிப்போம்
வலித்திழுப்போம், விடக் கூடாது.

நஞ்சு பிறந்தால் அதற்கு
நாம் பயந்து விடலாமோ?
நன்மை வேண்டின்
அஞ்சி அஞ்சிச் சாவதனால்
ஆவதொன்றும் இல்லையப்பா

அமுதம் காண்போம்

அடிக்கடி தான் இப்பொழுது நஞ்சு வரும்
ஆனாலும் அதனைச் சாட்டி
நடுக்கடலில் மத்தை விட்டு
நாம் விலகி ஓடுவதா?
நல்லாயில்லை
துடிப்பிருந்தால் –
என்ன செய்யும் தூறுகிற சிறிய மழை?
சோர்வு வேண்டாம்.
'குடைத்தடியை' எறிவோமே!
இரண்டு கையும் பிடித்திழுப்போம்
– கூச்சம் இன்றி

1989



படிப்பகம்

padippakam

# ஆவல்

ஆர் தான் ஆசைப்படார்?
அமைதி காக்க
ஆரே தான் ஆவல் கொள்ளார்?

கார் காலம் கோடை காலம்
கடும்பனிக் கூதர்காலம்
சீரான வானம் மாறிச்
சீறிடும் காற்றுக் காலம்
தீராத வேர்வைக் காலம்
தேன் காலம் எது என்றாலும்
ஆர் தான் ஆசைப்படார்
அமைதி காக்க
ஆரே தான் ஆசை கொள்ளார்?

மணங்களை உணர்ந்து கொண்டோ
'மலரடி' ஓசை கேட்டோ
நிழல்களின் அசைவு பார்த்தோ
நிற்கும் நாய் குரைக்கும், தம்பி
உணர்ந்தன உணர்த்த வேண்டி
உரப்புடன் குரைக்கும் தோறும்
அழிவதெம் அமைதி தானே!
ஆரிடம் சொல்வோம் நாங்கள்?

ஆர் தான் ஆசைப்படார்?
அமைதி காக்க
ஆரே தான் ஆவல் கொள்ளார்?
ஆர் தான் ஆசைப்படார்?

1989



படிப்பகம்

padippakam

# கூத்து

மோதித் தலைகள் உடைத்துக்
கெடுத்து, முறுகி எழும்
பேதங்கள், வாதங்கள் மூட்டிப்
பெருக்கும் 'பிளா(ய்)னுடனே'
தேர்தல் வழிச் சனநாயகம்
ஒன்றே சிறந்ததென
ஆதரவாக அமைத்துக்
கொடுத்தவன் அய்வ(ர்) ஜெனிங்ஸ்.

'ஒற்றைத் தனி ஆட்சி மத்தியிலே'
என்னும் ஓர் முறையைப்
பற்றிப் பிடித்து மகிழ்ந்தனர்
அப்பெரும்பான்மையினர்
'முற்றும் சிறந்த மதம்' என்று
புத்தனார் முன்மொழிந்து
கற்பித்த மார்க்கத்தை மட்டும்
வியந்தனர் – காதலித்தே!



படிப்பகம்

padippakam

சிறிலங்கா என்பது சின்னக்
குறுநலத் தீவெனவும்
பிறர் இங்கு வாழ்தல் பிழை என்றும்
எண்ணியே பேசுகிற
வெறிகொண்டே ஆடிடும் வீண்
நிலைக்கான விதை விதைப்பு
நெறி இங்கே ஆரம்பம்
ஆனதடா, தம்பி, நேற்றிரவே.

கட்சிப் பெரும்பான்மை பெற்றவர்
யாரும் கடவுளர் போல்
உச்சத் தலைமை அதிகாரம்
கொள்ளும் உரிமை பெற்றார்
எட்டி உதைக்கவும் மற்றத்
தரப்பினை ஏசிடவும்
கொச்சைப்படுத்தவும் ஆதிக்கப்,
ஆற்றல்கள் கொண்டனரே.

தொகையால் மிகுந்த எவரே
எனினும் சுகம் பெறலாம்
பகையாய் நினைந்து பிறபேரை
மோதிப் பழித்திடலாம்
புகையாய் இலங்கையை ஊதி
ஒதுக்கப் புறப்படலாம்
மிகவே தரலாம் – எதிரிகள்
யாருக்கும் – வேதனையே

இவ்வகையான அரசியற்
கூத்தின் இருப்பிடமாய்த்
திவ்வியமான இத்தீவின்
நிலைமை திரும்பியதேன்?
பல்விதமாகிய பேதங்கள்
தொற்றிப் படர்ந்து விட,
செவ்விய சீலம், ஒழுங்கு
நலங்கள் சிதறியதேன்?

1992



படிப்பகம்

padippakam

# மதம்

சிறு புழு, கறையான், நத்தை
செருப்பின் கீழ் நசிவதே போல்
அறிவுடை மனிதர்— நாங்கள்
அழிந்திட இணங்குவோமோ?
பொறுமைக்கும் வரம்புண்டய்யா
போட்டிக்கும் எல்லை உண்டே
அறம் என்றும் நீதி என்றும்
அரும்பொருள் இன்னும் உண்டே!

இருட்டுக்குட் சுருட்டி வைத்தாய்
எங்களை நொறுக்கி வைத்தாய்
கருத்துக்கு மூடி போட்டாய்
கண்கட்டு வித்தை காட்டிப்
பொருட்களைத் தடுத்து வைத்தாய்
புழுக்கமும் பசியும் வாட்டச்
சுருக்கிட்டாய்
தவிக்க வைத்தாய்
சுயநலப் பிசாசம் ஆனாய்



படிப்பகம்

padippakam

உனக்குப் போல் கழுத்து, கால்
கை
உனக்குப் போல் மூக்கு, மூளை
உனக்குப் போல் வயிறு, நெஞ்சம்,
உண்டய்யா எங்களுக்கும்
'எனக்குத்தான் பூமி முற்றும்'
என்று நீ சொல்லலாமோ?
சினத்தை ஓர் மதம் போல் ஆக்கிச்
சிக்கிப்போய்த் திணறலாமோ?

திமிரினால் நம்மேல் ஏறிச்
செய்யலாம் சவாரி என்ற
நினைவை நீ விடுதல் வேண்டும்.
நெற்றியிற் கல்லை வீசிச்
சமரிலே கோலியாத்தைத்
தாவீது வெற்றி கொண்டான்
 – எமனாகி முடிவு கண்டான்
இதனை நீ நினைக்க வேண்டும்.

கண்ணீரும் வெப்ப மூச்சும்
கதறலும் பதைப்பும் சாவும்
வெண்ணீறும் சாம்பல் மேடும்
வெதும்பலும் விளைவிக்கும் நீ
மண்ணோடு மண்ணாய்ப் போவாய்
மமதையின் மதம் பிடித்த
கண்ணோட்டம் ஒழியுமட்டும்
கட்டாயம் ஓயோம் நாங்கள்.





படிப்பகம்

padippakam

# குறுநலப் பித்தம்

ஒரு நாள்..... தமிழன்
தனிமையில், கல்லில் உட்கார்ந்திருந்தான்
பெருநாள் கொண்டாட இதுவா
தருணம்?
பெரிய பிழை!
வருநாள்கள் எப்படி வந்திடுமோ?
என் மனக்கவலைச்
சுருள் தான், குலைந்து சுகம்
வருமோ? என்று சோர்ந்தனனே

2

கண்டங்கள் ஆகிப் பரந்த
உலகில், கணக்கிலவாய்
மண்டும் குழுக்களே
மானுடக் கூட்டம் – மனிதர் இனம்
உண்டும் குடித்தும் மணந்தும்
புணர்ந்தும்
உவகை நிலை கொண்டும்
குலத்தை விரித்தும் திரியும்
குணத்தினதே.

ஒவ்வொரு கூட்டத்தார் ஒவ்வொரு
பேச்சினர்
உண்பதிலும்
ஒவ்வொரு பாக முறையை
விரும்பலாம்
ஒவ்வொருவர்
ஒவ்வொரு மோடி உடையை
அணியலாம்
ஒவ்வொருவர்
ஒவ்வொரு மோடி மனை கட்டலாம்
– தாம் உறைவதற்கே.



படிப்பகம்

`ஒவ்வொரு கூட்டமும்
ஒவ்வொரு போக்கில் உணர்வுகளை
ஒவ்வொரு பாட்டாக்கி
ஒவ்வொரு பண்ணிலே ஓதிடலாம்
ஒவ்வொரு கூட்டமும்
ஒவ்வொரு பாணியில் ஊன்றி நின்றே
ஒவ்வொரு கூத்து வகையினை
ஆடலாம் – ஊரகத்தே.

`ஒவ்வொரு கூட்டமும்
ஒவ்வொரு போக்கிலே ஓவியங்கள்
செய்து, நயங் கண்டு
சிந்தை குளிர்ந்து சிலிர்த்திடலாம்
ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு
சிற்பஞ் செய் உத்திகண்டே
ஒவ்வொரு வண்ணம்
உணர்ச்சி பெருக்கலாம் –
ஓ, இனிதே!

`பிறப்புச் சடங்கு முறைகள்
வெவ்வேறாய்ப் பெருகிடலாம்
இறப்புச் சடங்கிலும் ஏதேதோ
பேதம் இருந்திடலாம்
சிறப்புச் சடங்கென்று கொள்ளப்
படும் மணச் சீர்ச்சடங்கும்
வெறுப்பு விருப்புக்கிசைய
அடையலாம் – வேற்றுமையே.

`கும்பிடும் தெய்வங்கள் நூறாய்ப்
பலவித கோலங்களில்
நம்பிடும் மாந்தரை ஆட்கொண்டே
உய்தி நலம் தரலாம்
நம்பிடும் தத்துவம் ஒவ்வொரு
போக்கில் நடந்திடலாம்
செம்பொருள் கண்டால்
அறிவு தெளியும் – திறம்படவே

padippakam

ஆகையினால், மதம்,
சம்பிரதாயங்கள், ஆகமங்கள்,
சாதி, இனங்கள், சடங்கு,
வழமை, சரித்திரங்கள்
தேக நிறங்கள்,
ஒலிக்கின்ற ஓசைகள், செய்யுள் வகை,
வேதம், தரிசனம், ஆலயம்,
மார்க்கம் விடும் வழியே.........
முன்னை மரபின் மகிமையை,
பேசும் மொழி இயல்பை,
தன்னின மேன்மையின் சான்றெனக்
கொண்டிடும் சாதனையால்,
பின்னம் அடைந்தது மானுட சேனை
பெருமை கெட்டே....
உன்னதமான ஒருமையில்லாமல்
ஒழிந்ததுவே

'இனமேன்மை வாதக்
குறுநலப்பித்தும் எழுந்ததனால்,
சனமேன்மை வாதத்தின்
சாத்தியப்பாடு தளர்வடைந்து
மனமேன்மை கெட்ட
மனித குலமாகி வாழ்வு கெட்டுச்
சினமேன்மையே ஓங்கிச்
சீரழிவாகிய செய்தி என்னே!

ஈழத்தில் மட்டுமா,
இந்த நிலைமைகள்?
எங்கும் உண்டே!
மீளத் துடிக்கின்ற
நாடுகள் தோறும் மிகச் செறிந்தே
ஆழக் கிடக்கும்
அடிப்படை வாதங்கள் அத்தனையும்
நாளும் துளிர்விட்டு
மூச்சாய்ச் செழிப்பன, நம்மிடையே!



படிப்பகம்

padippakam

'எங்கு பார்த்தாலும் இதுதான்
நிலைபரம்
என்ன செய்வோம்?
எங்கு பார்த்தாலும் இதுதான்
அரசியல் – ஈனநிலை
எங்கு பார்த்தாலும் இவைகளே
போர்க்குரல் – ஏச்சொலிகள்
எங்கு பார்த்தாலும்
இனக் கொலைப் பாதக ஈனங்களே!,

4

எண்ணத்தில் மூழ்கி
இருந்த தமிழன் எழும்பி நின்றான்
கண்ணைத் திறந்து சிறிதே
இமையைக் கசக்கி விட்டான்
திண்ணமாய் ஒன்றும் தெளிவில்லை
– நல்லதோர் தேற்றமில்லை
அண்ணாந்து பார்க்கிறான் –
அங்கலாய்ப்பால்...
என்ன ஆகுமிங்கே?

1992



படிப்பகம்

padippakam

# காதினிலே விழும் கீதம்

– ஊருக்குப் பெரியவர்
நானே தானே
உலகத்தில் பெயர்பெற்ற
சீமான் நானே
ஆருக்கும் பயம் இல்லா
அய்யா சாமி
அமைதியின் பேர் சொல்லி –
வாழ்வேன் நானே.

– தீர்வுக்கு வழி சொல்லும்
அய்யா சாமீ!
சிரிப்புக்கு கருத்தென்ன –
சொல்வீர் சாமீ!

– யாருக்கும் வாழ்விடம்
வேணும் தானே!
இடருக்கும் வறுமைக்கும் –
தடைபோட வேணும்.

– போர் நிற்க ஏதேனும்
செய்வீர், அய்யா
புகழ் பெற்று வாழலாம் –
லங்கா தீவில்

– அமைதிதான் நல்லதாம்
அன்பே தெய்வம்
ஆனந்தமாய் மக்கள்
சாகட்டும், அப்பா!
அமைதிதான் எங்களின்
நோக்கமும் ஆகும்.
அஞ்சாதீர், அஞ்சாதீர்:
எல்லாம் நன்மை.



படிப்பகம்

padippakam

– சண்டையை எப்போது
நிற்பாட்டுவீர்கள்?

– சகலர்க்கும் இசைவான –
தீர்வு நாம் காண்போம்.

– என்றைக்குத் தான் எங்கள்
இன்னல்கள் ஓயும்?
ஏக்கங்கள் தேக்கங்கள் –
தேய்ந்து பொய் ஆகும்?

– இன்றைக்கு நான் ஒன்றும்
சொல்லேன், சொல்லேன்
ஏற்றதோர் சூழ்நிலை
தோன்றும் தானே!
அன்றைக்குச் சண்டையை
நிற்பாட்டி வைப்போம்
அது மட்டும் பேசாமல்
வாய்மூடும், அம்மா.

– என்றைக்குத் தான் எங்கள்
துன்பம் மாயும்?
ஏற்றதோர் சூழ்நிலை எப்போ
தோன்றும்?

– ஒன்றுக்கும் அஞ்சாதீர்
வெல்வோம் நாமே
ஊருக்குப் பெரியவர்
நானே தானே
ஊருக்குப் பெரியவர்
நானே தானே
உலகெங்கும் பெயர்பெற்ற
சீமான் நானே
ஆருக்கும் பயம் இல்லா
அய்யா சாமி
அமைதிக்குப் புகழ் பாடும்
அப்பா சாமி
ஊருக்குப் பெரியவர் நானே, நானே!

1993



படிப்பகம்

padippakam

# ஓவியம்

ஓவியம் ஆகி நின்றாய்
தோழா,
உன்னதமான குன்றாய்
நின்றாய்
ஓவியம் ஆகி நின்றாய்
நீ விழுந்தாலும்
எங்கள்
நெஞ்சில் இருப்பாய்
நீங்கா நினைவாகி
நேயம் சுரப்பாய்
ஓவியமாய்
எங்கள் உள்ளத்தில் நின்றாய்
உணர்வுக் கதிர் வீசி
உலகத்தை வென்றாய்
ஓவியமாகி நின்றாய்...



படிப்பகம்

padippakam

தீவிரமாகி நீ சீறி எழுந்தாய்
திக்குகள் தோறும்
ஓர் தீயின் பிழம்பாய்
சாவையும் கூட ஓர்
புல் என்று கொண்டாய்
தாய் நிலம் வென்றிடும்
வென்றிடும் என்றாய்
ஓவியம் ஆகி நின்றாய்...

கை கட்டி வாய்பொத்திக்
காலில் விழுந்தும்
கண்கட்டு வித்தையில்
ஞானம் இழந்தும்
பொய்பட்ட மூடரைக்
காறி உமிழ்ந்தாய்
புனிதப் பணிக்கென உன்
ஆவியும் தந்தாய்
ஓவியம் ஆகி நின்றாய்...

கோபுரம் ஆகி ஒரு
கோட்டையும் ஆனாய்
குள்ள மதியோர் அஞ்சும்
சாட்டையும் ஆனாய்
ஞாபக நாயகன் நீ
நட்ட கல் ஆனாய்
நட்ட கல் ஆகி
அன்புப்
பெட்டகம் ஆனாய்
ஓவியம் ஆகி நின்றாய்.

1994



படிப்பகம்

padippakam

# இடைவெளிகள்

சிட்னியில் உள்ள சுற்றுலா ஹொட்டலில்
மனித உரிமைப் பணிக்களத்துக்காய்,
கலை — பண்பாட்டுத் தூதராய் ஏகிய
குணசேன 'க'மகே'க'
தம் டயறியில்
கீழ்வருமாறு பதிந்து கொள்கிறார் —
'இனம், மதம், மொழி, குலம் —
இவைகளைக் கடந்த
நாட்டுப்பற்றின் நன்மைகள் எத்தனை!
குறுநலப்பித்தரும் கடும்போக்காளரும்
தம்மவர் எல்லாம் தாழ்த்தப்படுவதாய்
— வதைத்தும் உதைத்தும் மிதிக்கப்
படுவதாய் —
எத்தனை கெட்ட புளுகுகள் கட்டுவர்'

கூத்தர், கலைஞர் குணசேன 'க'மகே'க'
இந்தவாறு குறித்துக் கொள்கிறார்.

?
'க'மகே'க'க்கு என்ன தெரியும் —
வயது போன வயித்தியநாதரும்
நடேசரும் கனகரும் நல்லம்மாவும்
நாகநாத சுவாமியும் உட்பட
எல்லாருக்கும் கிடைக்கிற அரிச்சனை!
மீசை கூட முளைக்கா வீரவான்
வண்டியால் இறக்கி வரிசையில்
விட்டு
ஒரு குட்டி விரிவுரை கொடுக்கத்
துணிகிறான்

பீடப்பதியாய்ப் பெரும்பணி ஆற்றி
வேலையை விட்ட வீரசிங்கரும்
நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாமோ
என.



படிப்பகம்

padippakam

தம்மையே வெறுத்துத் தலையைக்
குனிகிறார்.

நடுவயதுள்ள நாகம்மாவோ
தலையிடி போல் ஒரு சாடையைக்
காட்ட
அரைக்கண் மூடிச் சரிந்து கொண்டாலும்
'அந்தாள்'
இலேசிலே விடுவதாய் இல்லையே!

வீட்டின் அயலிலும் கேற்றின்
அருகிலும்
திறந்த வளவிலும் தெருவிலும்
வெளியிலும்
'பாதுகாப்புக்காய்' ஆளணி உண்டு.

பூட்டென்பது தன் பொருளை
இழந்தது
வேலிகளுக்கும் வேலைகள் குறைவு
'கமேக்'க்கு என்ன தெரியும்?

3

கூத்து வல்லுநர் குணசேனருக்கும்
குடாநாட்டு அன்பர்
குமாரசாமிக்கும்
எத்தனை ஒளி ஆண்டு
இடைவெளி
உள்ளது?
ஒருவரை ஒருவர் நெருங்க
எத்தனை மில்லியன் ஆண்டுகள்
வேண்டும்?

அத்தனை ஆண்டுகள் எடுக்காது
என்றுதான்
இவர்களும் உவர்களும் ஆகிய
நாங்கள் யாவரும்
நம்ப விரும்புவோம்.

1998



படிப்பகம்

padippakam

# பிரிப்பது மானம் ஒன்றே

பேசுதல் வேண்டும்
உள்ள
பிசகுகள் திருத்த வேண்டும்
தூசுகள் துடைக்க வேண்டும்
தூய்மைகள் துலக்க வேண்டும்
காசுகள் மிஞ்ச வேண்டும்
சுன்ற்/றியும் உயிர்க்க வேண்டும்
பேசுதல் வேண்டும் என்றால் –
பிரிப்பது மானம் ஒன்றே.

1997



படிப்பகம்

padippakam

# விலை மதிப்பு

'மனித உயிர் விலை என்ன?'
'ஒன்றும் இல்லை'
மண்வெட்டிக் கட்டைகளால்
இடிப்பதாலோ,
குனிய விட்டுப் பின் கழுத்தை
உடைப்பதாலோ
கூர்க்கம்பி கொண்டு
துளை துளைப்பதாலோ
தனிமையிலே —
குடில் கொட்டில் ஒதுக்கில் வைத்து,
தகதகத்து மூளாகிற நெருப்பை
மூட்டி
உயிர்களை நீர் உடம்பைவிட்டுப்
பிரிச்சுப் போட்டால்
ஒரு சதுரச் [illegible] —
மனித [illegible]

 முருகையன்

படிப்பகம்

padippakam

மயிர்களுக்கும் பெறுமானம்
உண்டு காணும்
வடிவழகுப் பொருட்கடையில்
தொங்குகின்ற
முடிமயிரைக் கூட
ஒரு தொகை காசுக்கே
முதலாளி வியாபாரம் பண்ணுகின்றார்.
தயிர்வடைக்கு விலை உண்டு,
துடைப்பக் கட்டைத் தடிகளுக்கும்
விலை உண்டு
மென்று துப்பும்
'பொயிலை' நெட்டுத் துண்டுக்கும்
விலை உண்டய்யா
புழுதி மண்ணும் பெறாதிங்கே
– மனித ஆவி.

அகப்பட்டால், கடத்திப்போய்
எங்கென்றாலும்
அந்தியகாலச் சடங்கைச் சுருக்கம்
ஆக்கி,
சதுப்பு நிலம் வசதியாய்க்
கண்டு கொண்டால்,
சட்டமென்ன –
சாத்திரமும் தோற்றுப் போகும்
யுகப் புரட்சி வாசலில் நாம்
நிற்கின்றோமாம்
உண்மை தான்
அடுத்தவனை மிதித்துத்தள்ளி
வதைப்பதென்று துணிந்துவிட்டால்
மனித ஆவி
மதிப்பெதுவும் இல்லாத
துரும்பு, பாரும்.

1998



படிப்பகம்

padippakam

# கழுதையின் காதுகள்

வருகிறான் வழுதி தன் வயலின் அருகிலே
'உழுது விதைச்ச உழுத்தங்காணிப்
பயிர்களை அழிச்ச பாவி யாரடா?'

'மழவைராயரின் மாடு கன்றுகள் தான்
ஏழோ எட்டோ இறங்கி
உழக்கினதய்யா, உங்க காணியை'

வழுதி என்பவன் வாளை எடுக்கிறான்
அப்பாத்துரையிடம் அதனைக் கொடுத்துச்
சாணை பிடித்துத் தரும்படி வேண்டிக்
கூர்மைப்படுத்திக் கொள்கிறான்
– வழுதி

கழுதை அஞ்சாறு கடவையில் நின்றன
வழுதி
தனது வாளைக் கொண்டுபோய்
கழுதைக் காதுகள் எல்லாம்
அரிகிறான்
செவ்வையாகச் செவிகளைப் பிடித்தே
ஒட்ட நறுக்கிறான், ஒன்றும் விடாமல்
புழுதி கிளம்பிய தெருவழி எல்லாம்
குருதி சேறாகிக் குழம்பும்
– நாறும்
கழுதைக் காதுத் துணுக்குகள் தடுக்கி,
போவோர், வருவோர்



படிப்பகம்

padippakam

விழுந்தனர், எழுந்தனர்.
ஊர் முழுவதிலும் ஒரே புலால் வெடுக்கு!
மக்களிற் சிலபேர் வாந்தி எடுத்தனர்.

மழவைராயரின் மாடு கன்றுகளோ
எந்தக் கவலையும் இன்றி
ஊர்வலம் வந்தன
ஒரு பயம் இல்லை.

கழுதைகளுக்காய் கவலைப்பட்டவள்
கமலம் என்னும் சிறுமி மட்டுமே.

வழுதியைக் கண்ட மயிலுவும்
தங்கமும்
ஒருவரை ஒருவர் பார்த்து,
தமக்குள் சிரித்துக் கொண்டனர்
– மெல்லமாய்!

ஐந்து வருடமாய் மைந்தனை நினைந்து
நைந்து கண் கசிகிறார்
– நம்பியின் அன்னையார்
போனவன் இன்னும் திரும்பவில்லையே!

நாளும் பொழுதும் நடைமுறை இதுதான்
என்பதால்
ஏனைய மாந்தர்
'எல்லாம் நோமல்' என்று போயினரே.

(நறுக்கிறான்-நறுக்குகிறான் என்பதன் செய்யுள் விகாரம)

1998



படிப்பகம்

padippakam

# மூல மந்திரம்

விஞ்ஞானி தம்பரின் மருகர்
முனைவர் கிஞ்ஞாலி இராமன்
ஹிஸ்ட்ரி எழுதுவார் –

பூனையும் பூதியும் கூடிய கூடலில்
சேனாவரையன், குத்தியன் தோன்றினர்
சேனாவரையன் மைந்தன் சேந்தன்
சேந்தன், ஆந்தை, மாந்தை, ஓந்தி
வழுதி, புழுதியார், அழகி, குழலியார்
காத்தான், காரி, பார்த்தான், பாரி
வள்ளி, மள்ளனார், கிள்ளி, கீரனார்
என்றிவ்வாறு தொடர்ந்து தொடர்ந்து
நூற்றெட்டாவது தலைமுறை முடிய
`தம்மளர்` என்ற சாகியம் வந்தது
சிம்மமும் சீலியும் இல்லறம் நடாத்த
கங்கா, யமுனா, டிங்கிரி தோன்றினர்
மனிக்கே, நாயக்க, மினிக்கோ, கோமல
சமற, தாயக்க, லெகம, சாமய
சுமணே, குமறகே, சோம, குணாகுணே
பசற, பண்டா, திசற, செய்க்கற
எனவாங்கு
இப்படித் தொடர்ந்து தொடர்ந்தே
`சிம்மளர்` எனப்படும் சிஙனீஸ்
நிமிர்ந்தனர்.



படிப்பகம்

இவற்றை நாங்கள் எடுத்து நோக்கினால்
ஆதி வாசிகள் ஆர் என அறியலாம்.
(பூனையா சிம்மமா புதியது/பழையது? –
இந்த வினாக்கள் கருதத்தக்கன)
படைப்புக்காலம் தொட்டு
நிலத்திலே
வேரூன்றியவர் மாத்திரம்
இந்த
ஊர்மனை மீதில் உரிமை உடையவர்.
ஒறிஜினல் உள்ளூர்ப் பிறவிகள் இவர்களே
(வந்துறு குடிகள் மற்றையோர் என்க)
தாயகம் என்னும் கோட்பாடும்
இதன் வழி உறுதி பண்ணத்தக்கது

கிஞ்ஞாலி இராமன் ஹிஸ்ட்ரி எழுதுவார்.
எழுதுவாரா அவர்? ஏன் அவர் எழுதார்?
'புத்தகம் இயற்றும் போட்டி ஒன்றிலே
பத்து நூறாயிரம் பரிசில் தரலாம்'
என்று நாங்கள்
எடுப்பு மிடுக்குடன்
மின்னணு மீடியா வாயிலாய்
கலாதியாய்
விளம்பரம் பண்ணினால், விடுவரா முனைவர்?

முதலாம் பரிசிலை வழங்கி
விருதும் தந்து விழாக்கள் எடுக்கலாம்
புத்தகம் சொல்லும் புது வரலாற்றை
பள்ளி தோறும் படிப்பித்திடலாம்
பாடநூலாயும் வைக்கப் பண்ணலாம்
புலமைப் பரிசில், போட்டிகள், மணிவிழா,
பணிக்களம், ஆய்வுப் பட்டறை, பூசனை
சரித்திர தினங்கள், சமூகத் திருநாள்
எல்லாவற்றிலும் இதனையே
கட்டாய மூலமந்திரம் ஆக்கலாம்.

பட்டாளம் செய்யத் தவறிய சாதனை
கட்டாய மூலமந்திரம் செய்யுமே!

1998

padippakam

# கூவும் சேவல்கள்

1

'கொக்கர கோழ! கொக்கர கோழ!
இப்படித்தானாம் சேவல்கள் கூவின
அய்ம்பது ஆண்டின் முன்
அய்ந்து வயதுப் பிள்ளைகள்
தமக்குட் பேசிக்கொண்டனர்.

2

பிறகொரு பெரிய புலவர் வருகிறார் –
தனித்தமிழ்ச் செம்மொழிச் சய்வப்
புலவர்
'கொக்கறு கோழ! எனக் கூவிடும்
சேவல்'
'கொக்கறு கோவா!
அதென்னவோ அய்யா?'
'கொக்கு – மாமரம்
கொக்கினை
வேலால் அறுத்தவன் முருகன்'



படிப்பகம்

padippakam

`அப்படி என்றால்?`
`சமுத்திர நடுவில் மாமரமாக
நிற்கிறான் சூரன்
நின்மலன் முருகனோ
வெற்றிவேல் வாங்கி வீசினான்
வீச
மாமரம் சரிந்தது
சேவலும் மயிலும்!
ஊர்தி ஆகியும் உயர்கொடி ஆகியும்
சூரன் பிறகு தொண்டு செய்தானாம்
சேவலாய் மாறிய சூரனின் கூவலே
கொக்கறு கோழ, கொக்கறு கோழ!
கோ எனப்படுவது தலைவனின்
மறுபெயர்
தலைவன் முருகனே கோ
எனப்படுகிறான்`
இலக்கணப் புலவர் இப்படி
விளக்கினார்
திருச்செந்தூரைச் சேர்ந்தவர், புலவர்
`கொக்கறு கோழ, கொக்கறு கோழ!

3
மதுரைப்பக்கக் கோழிகள் என்றால்
`சொக்கநாதா அ!`
என்று தான் சொல்லுமாம்
சொக்கநாதன் – சோமசுந்தரன்
மீனாட்சி
போட்ட சொக்குப்பொடியிலே
சொக்கி விழுந்தவன் சொக்கநாதனாம்
`சொக்கநாதா அ! –
மதுரைக்கோழிகள்.

4
`கொக்கெ டுடிள் டூ, கொக்கெ டுடிள் டூ`
கொன்வென்ற்றுகளில், குழந்தை
வாய்களால்
கோழிகள் யாவும் அப்படிக் கூவுமாம்
தமிழ்த்தாய் தனது மழலைகள் பலரை
ஐங்கிலோ மெடம்சிடம் தத்துக்



படிப்பகம்

கொடுத்தபின்
கொன்வென்ற் மரபிலே கோழிகள் கூவ,
கூவல் ஓசையின் கோலம் –
'கொக்கெ டுடிள் டூஉ, கொக்கெ டுடிள் டூஉ'!

5

எங்கள் ஊர்ப்பக்கக் கோழிகள் யாவும்
காலையில் எழும்பிக் கழுத்துகள் நீட்டி
'தட்தட்.... தட்தட்... கொத்தெடா
தம்ம்பி...
கொத்தெடா தம்ம்பி... கும்மெடா கும்ம்மு...!
மொத்தெடா முண்ண்டு –
முண்ண்டெடா முந்நது!'
இந்த மாதிரிக் கூவுகின்றன.

நாங்களும் கோழியைப் பார்த்து,
கூவுவோம் –
'எப்ப நீர் போவிர், எப்ப நீர் போவிர்?'
கோழிகள் எமக்குக் கூறும் –
எப்படி?
'இப்ப நாம் போஒகம், இப்ப நாம்
போஒகம்!'
நாங்களும் அதற்கு மறுமொழி
சொல்லுவம் –
'இப்பவே போஒங்க, இப்பவே
போஒங்க!'

மறுமொழிகளுக்கும் மறுமொழி
அந்த மறுமொழிகளுக்கும் மறுமொழி
எந்த
மறுமொழிகளுக்கும் மறுமொழி –
தொடரும் :
மறுமொழிகளுக்கும் மறுமொழி
ஓமோம் :
மறுமொழிகளுக்கும் மறுமொழி கூவல்.

'இப்பவே போஒங்க!'
மறுமொழி –
'இப்பநாம் போஒகம் போகவே போஒகம்!

1998



படிப்பகம்

padippakam

# இந்த மண்ணின் ஒவ்வொரு புல்லையும

இந்த மண்ணின் ஒவ்வொரு
புல்லையும்
ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம்
இங்கு தோன்றும் ஒவ்வொரு
பிள்ளையும்
இறைவன் ஆவதை நாடுகிறோம்
இறைவி ஆகவும் இறைவன் ஆகவும்
இலங்கும் சூழ்நிலை தேடுகிறோம்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்
இறைமை நீதியின் எதிரி தூள்பட
எறியும் ஓர் வழி நாடுகிறோம்.

வெண்மணல் மேவிய பனைவெளி
எங்கும்
வீணையின் ஓசை பரவட்டும்
தண் கடல் மீது தோணிகள் ஓடி
தாவர சங்கமம் பெருகட்டும்
வயலில் பயிர்கள் நிமிரட்டும்
வானம் பொழிந்து தளிரட்டும்



படிப்பகம்

padippakam

தொழில்கள் ஓங்க விண்ணும்
மண்ணும்
தூய்மை மேவி ஒளிரட்டும்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்

வன்னி மண்ணின் காடும் குளமும்
மாடும் கன்றும் பாடுகிறோம்
மின்னும் மீன்கள் பாடும் வாவி
விளங்கும் கிழக்கைப் பாடுகிறோம்
குன்று மூடும் முகிலும் மழையும்
குளிரும் தொழிலும் பாடுகிறோம்
முன்றில் தோறும் இன்ப நாதம்
முரலும் சூழல் தேடுகிறோம்
சின்னஞ்சிறிய முல்லைப் பூவும்
சிறகு விரிக்கும் தாமரையும்
வன்ன வன்ன வெள்ளி மின்னும்
வான வெளியும் பாடுகிறோம்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு நெல்லையும் நாடுகிறோம்
ஒவ்வொரு கல்லையும் தேடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்

இந்த மண்ணின் ஒவ்வொரு புல்லையும்
ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம்
இங்கு தோன்றும் ஒவ்வொரு
பிள்ளையும்
இறைவன் ஆவதை நாடுகிறோம்
இறைவி ஆகவும் இறைவன் ஆகவும்
இலங்கும் சூழ்நிலை தேடுகிறோம்

1994



படிப்பகம்

padippakam

# விளக்கத் துணை

## கதிர்காம தெய்யோ

கதிர்காமத்து முருகனைச் சிங்கள மக்கள் 'கத்தரகம தெவியோ' என்று குறிப்பிடுவர். இத்தொடர் தமிழர் நாவில் 'கதிர்காம தெய்யோ' என வழங்கும்.

'1956 இல் 'சிங்களம் மட்டும் சட்டம்' பற்றிய தேர்தல் முழக்கங்கள் எழுந்த காலத்தில் இக்கவிதை தோன்றிற்று.

## பீடை ஒழிப்பாய்

'கல் ஓயா' என்னும் பிரதேசத்தில் காடையர் இனக்கலவரம் தொடங்கியபோது எழுதப்பட்டது.

## இணைப்பரசாட்சி உதிக்கும்

'புத்த செயந்தி' – புத்தர் பெருமானின் இரண்டாயிரத்து அய்ந்நூறாம் ஆண்டுக் கொண்டாட்டம். இது இலங்கையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புத்தரின் அகிம்சை, சமாதானக் கோட்பாடுகளுக்கு முழு மாறாக, ஆட்சியாளர் நடக்கின்றனரே என்னும் அங்கலாய்ப்பு இங்கு உட்குறிப்பாய் அமைவது நோக்கத்தக்கது.

## ஒரு முனையில் திரள்க

தமிழ்க் கட்சிகள் சிறு பூசல்களைக் கைவிட்டு உருப்படியாகச் செயற்பட வேண்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடு.

## தானை நடத்துக

அன்று நடந்தவை சாத்துவிக இயக்கமே ஆயினும் அதனை ஊக்கப்படுத்த எண்ணும் பேச்சாளரும் கலைஞர்களும் ஆயுதப்போர்ச் சூழலுக்குரிய சொல்லாடல் மரபுகளைக் கையாண்டது உண்டு. இது அணிநயம் நோக்கிய உத்தி மட்டுமே என்று கொள்வதே அன்றைய வழக்கம்.



படிப்பகம்

padippakam

## நாம் அதற்குச் சீறுவதோ?

1957 இல் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மாநாட்டுக்கு, இலங்கையின் முதலமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க சென்றிருந்தார். அங்கு உரையாற்றும்போது 'நாமெல்லாம் மதிப்புடைய நடத்தையுள்ள (யோக்கியமான) மனிதர்கள்' என்று பேசியிருந்தார்.

## வெற்றிக்கு விழா

தமிழ் உரிமை இயக்கம் விரைவில் வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பை உணர்த்தும் நோக்குடன் இக்காலகட்டத்துக் கவிதைகள் எழுந்தமை கவனிக்கத்தக்கது.

## பண்ணுங்கோ தமிங்களத்தை

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் நிலவிய மொழிக்கலப்பட மோகத்துடன் இங்கிருந்த இன மொழிப் பிணக்குகளையும் இணைத்து, கேலித் தொனியில் இயற்றப்பட்டது.

## நண்டு விடு தூது

1957 வாக்கில் மூண்ட 'சிறீ' எதிர்ப்பு போராட்டச் சூழலில் எழுதப்பட்டது. பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சி வலு இருந்த சமயத்திலே, CEYLON என வழங்கிய இலங்கையின் சிங்கள வடிவான ஸ்ரீலங்கா என்ற பேருக்கு அமைய கார் வண்டிகளின் எண் தகடுகளில் 1ශ්‍රී..... 2ශ්‍රී..... 3ශ්‍රී.... என்றவாறு ශ්‍රී என்னும் சிங்கள எழுத்துப் பொறிக்கப்படல் வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிர்ப்புக்காட்ட எண்ணிய தமிழரசுக் கட்சியினர், சிங்கள ශ්‍රීயைப் பெயின்ற்றால் அழித்தல், அவற்றின் இடத்திலே 'சிறீ' எனவோ, SRI எனவோ, ஸ்ரீ எனவோ எழுதுதல் ஆகிய நடைமுறையைக் கையாண்டு, சட்டமறுப்புச் செய்யத் தொடங்கினர்.

சிங்கள எழுத்தான ශ්‍රී ஏறத்தாழ நண்டு போலத் தோன்றுவதால் அக்காலத்தில் 'நண்டெழுத்து வேண்டாம் நமக்கு' என்ற கோஷமும் தோன்றியது.

இதே காலத்தில் முன்பு தனியார் கம்பெனிகளின் பொறுப்பில் இருந்த பேருந்துச் சேவை தேசிய மயமாக்கப்பட்டு 'இலங்கைப் போக்குவரத்துச் சபை' என்னும் அரச கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் பெயர் 'இ.போ.ச.' என்று [illegible] குறிப்பிடப்பட்டது [illegible] பேருந்துகள் 'இ.போ.ச வண்டிகள்'



படிப்பகம்

padippakam

என்றும் 'ஈப்போசா வண்டிகள்' என்றும் சுட்டப்பட்டன. இந்த வண்டிகள் வசதிக் குறைவானவை என்று கருத்து மேலோங்கியபோது, 'இ.போ.ச' என்பதற்கு கேலிக்குறிப்புடன் விளக்கங்கள் தரப்பட்டன. 'இதில் போவது சங்கடம்', இப்போசா (இப்பொழுது, உடனேயே சாவைச் சந்திக்க வா) என்று தேசிய மயமாக்கப்பட்ட பேருந்துகளும், அவற்றை ஓட விட்ட சபையும் கிண்டல் செய்யப்பட்டன.

'சிறீ' எதிர்ப்புப் போராட்ட காலத்தில், யாழ் குடாநாட்டிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளும் 'நண்டெழுத்து'டன் காணப்பட்டபோது, அவற்றில் இருந்த ஸ்ரீ அழிக்கப்பட்டு, அவை பறைமேள உபசாரத்தோடு மயானத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டுத் தீ மூட்டப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் எழுந்த ஒரு பாட்டே 'நண்டு விடு தூது'.

## வெட்கம் கொள்ளுக

அறப்போர் என்ற கொள்கையைக் கைவிட்டுக் கலகம் செய்யும் முனைப்புகளைக் கண்டு வருந்தி எழுதியது.

## யாத்திரை பல வகை

சருவதேச பாராளுமன்றங்களின் தரிசனம் பெறல் – 1957 இல் ஒரு கட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலிருந்த குரோதங்கள் சற்றுத் தணிந்தன. பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதற்கு முன்பின்னாக, சருவதேச பாராளுமன்ற மாநாட்டுக்குச் செல்லும் வாய்ப்புகள் தமிழரசுக் கட்சியினருக்குத் தரப்பட்டன. இதை ஒரு பெரிய சலுகையென ஒரு சாரார் எண்ணினர். ஆனால் 'பண்டா – செல்வா ஒப்பந்தம்' நெடுநாள் நீடிக்கவில்லை. இதனை எதிர்த்து, அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜயவர்த்தன ஒரு பேரணியை நடத்தினார். அது 'கண்டி யாத்திரை' எனப்பட்டது. ஒப்பந்தம்பற்றி நாட்டிலே கிளம்பிய எதிர்ப்பைச் சாட்டாக வைத்து, பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

திருமலை யாத்திரை – தமிழரசுக் கட்சியின் மாநில மாநாட்டுப் பேரணி திருகோணமலை நோக்கி முன்னெடுக்கப்பட்டது.



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாகும் என்று இலங்கையின் பிரதான சிங்களத் தேசியவாதக் கட்சிகள் இரண்டும் பிரகடனம் செய்து 1956இல் பொதுத் தேர்தலில் இறங்கும் வரை (அன்று அம்பாறையையும் உள்ளடக்கிய) மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் இரண்டுமே வேரூன்ற முடியவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களை அரசியல் அடிப்படையில் ஒன்றிணைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது அரச கரும மொழிச் சட்டமே எனலாம். சிங்களம் அரச கரும மொழியானால் தமிழ் அழியும். தமிழினம் அழியும் என்று பிரசாரம் செய்யப்பட்டாலும், தமிழரசுக் கட்சியின் தலைமையின் அக்கறை, தமிழ் மொழி மட்டுமே பேசும் பரந்துபட்ட மக்களது நலனை விட, ஆங்கிலம் படித்து ஆங்கிலத்திற் கருமமாற்றுவோரது நலன்களையே சார்ந்திருந்தது. இலங்கையில் தமிழ் மொழிக் கல்வியின் விருத்தியில், இலவசக் கல்வியும் தாய்மொழிப்போதனையும் பற்றி எடுக்கப்பட்ட அரச தீர்மானங்களின் அளவுக்கு தமிழ்த் தேசியவாதிகளது பங்களிப்பு அமையவில்லை எனலாம். தமிழரசுக் கட்சியைச் சார்ந்து உருவாகிச் செயற்பட்ட தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் போன்ற அமைப்புகள் நடுத்தர வர்க்கத் தமிழர்களது நலனை வற்புறுத்தின.

'தேசியமும் தமிழர் விடுதலையும்'
என்ற வெளியீட்டில்
**சி. சிவசேகரம்**

தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்